உ

கடவுள்துணை.

—*—

என்னையினைப் புலவரவர்கள்

இயற்றிய

# முக்கூடற்பள்ளுநாடகம்

இஃது

திருவெண்காடு.

ஆறுமுகசுவாமிகளால்

பார்வையிடப்பட்டு.

—()—

திருவொற்றியூர்.

பரசுராமமுதலியார்

குமாரர்

—*—

தி-கன்னியப்பமுதலியார்

அண்டுபிரதர் அவர்களது

பரப்பிரமமுத்திராக்ஷரசாலையிற்

பதிப்பிக்கப்பட்டது.

—()—

1894.

உ

கடவுள்துணை.

# புத்தகவிளம்பரம்.

இதனால் சகலமானபேர்களுக்குந்தெரிவிப்பது யாதெனில்சென்னையைச்சார்ந்த சூளை இருங்குன்றம் இலட்சுமிநாராயணபுரத்தில்தொட்டிக்கலை குமாரப்பமுதலியார் வீதியில் ௩௯-வது, கதவிலக்கமுள்ள கிருகத்தில் ஸ்தாபித்திரா நின்ற பாப்பிரம்மமுத்திராட்சரசாலையில் இதனடியில் கண்டிருக்கப்பட்ட புத்தகங்களல்லாமல் கற்றுணர்ந்தபெரியோர்களால் பிழையறப்பரிசோதித்து அச்சிடப்பட்டமிகமேலாகிய உபயோகமுள்ள பலவித வேதாந்த சித்தாந்த கிரந்தங்களும், வயித்தியகிரந்தங்களும், ஜோசியகிரந்தங்களும், சமஸ்கிருதகிரந்தங்களும், மகம்மது மார்க்கக்கிரந்தங்களும், இன்னும் அநேக விதமான தமிழ்ப் புத்தகங்களும், விலைசரசமாய் விற்கப்படுமாகையால் வேண்டியவர்கள் மேற்படி அச்சுக்கூடத்தலைவராகிய தி-ப-கன்னியப்பமுதலியாரவர்களிடத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

ஸ்ரீமகாபாரதவசனம்-௧௮-பர்வம் கிக்குகாகிதம்
ஸ்ரீமகாபாரதகீர்த்தனை
ஸ்ரீமகாபாகவதவசனம் ௰௨-ஸ்காந்தம் லெத்தகிராப்படத்துடன்
ஸ்ரீமத்கம்பராமாயண வசனகாவியம் சப்தகாண்டங்களுடனும் திக்குவிஜயமுட்பட
கிராமமுனிசிப்புசட்டம்
பெரியபுராணம்வசனகாவியச்சுருக்கம்-௯௫-படங்களுடன் கிரயரூபா-௩
பிரம்மோத்தரகாண்டம்
ஸ்ரீவிஷ்ணுபுராணவசனம்
விராடபர்வம் குட்டைசயிசில் அச்சிட்டது
பெரிய பராங்குசதாசர்கீர்த்தனை
அராபிக்கதை திக்குகாகிதம்
வீரமாமுனிவர்சதுரகாதிஅனுபந்தத்துடன் பெரிய எழுத்தில் அச்சிட்டது
வயித்தியசாரசங்கிரகம்

அகஸ்தியர் ஏமதத்துவ மென்னும் பஞ்சகாவியநிகண்டு-௮ா
தட்சிணாமூர்த்திதிருமந்திரம்-௩௫ா
தன்வந்திரிகலைக்ஞானம்-௫ா
இராமதேவர்வயித்தியகாவியம்-௩
அகஸ்தியர் ஆயுள்வேதம்-௩௨ா
பூஞணி பதார்த்தகுண சாரசங்கிரகம்
இயாக்கோபுவாதத்திறவுகோல்
போகர்சத்தகாண்டம்-௮௩
அகஸ்தியர் பாலவாகடம்-௩௱
வயித்தியமூலிகைஅகராதி
பதார்த்தகுணசிந்தாமணி
நளவிமபாகசாஸ்திரம்
குமாரசாமீயம்
ஜாதகசிந்தாமணி
சினேந்திரமாலை
கசசுல்லன்பியா
இறவுசுல்கூல்படைப்போர்மூலம்
ஐந்துபடைப்போர்
அப்பாசநாடகம்
சீறாபுராணம்.

ஸ்டாம்பு அனுப்பினாலல்லது பதில்கடிதம் அனுப்பப்படமாட்டாது.

உ

கடவுள் துணை.

# முக்கூடற்பள்ளு நாடகம்.

———*(*)*(*)*———

காப்பு.

## பாயிரம்.

### விநாயகர் – துதி.

திருநுதற்பருவத்தினடுவதனிலழகதாய்த்
    தீபங்கள்பலகோடிதான்
சேர்ந்திலகுபொருள்போலவொப்புரவமைகூறிய
    சிவஞானதிருநயனமுங்
கருணைபுரிவிழிகளுஞ்செம்பவளமேனியுங்
    கனகமுப்புரிநூல்களுங்
காடமதயானைபோலிருகுழைச்செவிகளுங்
    கனமானதொந்திவயிறும்
பரிதியொளிபோலுமணிவடமிலகுமார்பும்
    பகருமோதகஹஸ்தமும்
விண்ணவர்கள்மண்ணவர்கள்போற்றுமங்குசமும்
    பாந்தகவமணிமுடிகளும்
ஒருகோடிருபதமுமோங்கவேயாலவாய்
    ஓங்கிவளராங்கரவனே
ஓம்நமோகணபதிசிவஞானரூபனே
    ஓம்நமசிவாயமுதலே.

## நூற்சிறப்பு.

கனகமணியணிமார்பன்கவிராஜனமுதமொழிகனியுமேகம்
இனமருவிவாழ்ந்திருக்குமென்னயினான்மதுரகவியியலாய்ப்பாட
மனமுருகுந்தனம்பெருகுமாந்தர்கடஞ்சினமுருகுமகிழ்ந்துவாழ்வார்
தினமருவும்பூமாதுதேவர்கடம்பதம்பெறுவார்தேசத்தோரே. ௨

மன்னவர்கள்புகழ்ந்தேத்து மதுரகவிவாணர்மெய்ச்சு மதனலீலன், இந்நிலத்தோர்தழைத்தோங்குமென்னயினான் மதுரகவியிசைபாய்ப்பாடத், தன்னைமிகக்கேட்போர்கள் தனயர்தமைப்பெற்றிடுவார்தனங்களுண்டாம், பொன்னகரம்பெற்றிடுவார் புகழ்பொருந்திவாழ்ந்திருப்பார் புவியுளோரே. ௩

அக்கரைக்குமணிமார்பனமுதகவிபொழியுமுகி லகத்யவிம்பம்,வக்கரைக்குந்தனித்தியவேளான்சின்னத் தம்பிபருள்வாக்குபாடக்,கற்கரைக்குங்கேட்டிருந்தோர் மனங்கரைக்குங்கேளாதோர்காதுங் கேட்குஞ், சர்க்கரைக்கு முக்கனிக்கு மதிகாசமெனத்தோன்றுந் தரணியோர்க்கே. ௪

அபிராமிபதமலரையனுதினமுமறவாமலன்புகூர்ந்து
தவஞானவிதிமுறைமைவழுத்ததமிழ்ப்புலவன்சத்யவாக்கி
புவிராஜர்மனமகிழப்பாதகாட்டியவிதங்கள்பொலிவாய்த்தந்த
கவிராஜனருள்சாமிப்புலவர்பதமனுதினமுங்கருதுவாமே. ௫

## குருஸ்துதி.

இந்திரஜாலத்தோடுமயேந்திரஜால, மேற்றசெஜகர்ன்னகோகர்ன்னயான, மந்திரசாதனைபிலதிநோக்குவித்தை, மாறுடுசெப்படிவித்தையுமநேகந், தந்திரமும்பாதமுறைதனித்தெழுந்து, தமிழ்க்கவிகருவல்லவனாய்த்தரணியெங்குஞ், சுந்தரஞ்சேர்நிலங்குமுத்துப் புலவர்பாதந் துணையாகக்கருதிநித்தந்துதிசெய்வாமே. ௬

தீக்ஷைபெறுமாயனன்பனுதிமாமுனிவர்குலதிலகனானோன்
காட்சிபெருந்தமிசையாற்கலைமகள்தன்னவாசத்தைக்கருணையாலே
மூர்ச்சைதருமுக்கூடவிழகாருளைப்பணிந்துமுத்திபெற்ற
நாச்சிமுத்துப்பணிக்கர்பதமறவாமலனுதினமுநாடுவாமே. ௭

## விநாயகர்.

தனனதன-தனனதன

ஆனுதவுபாலனெனுமானைமுகத்தோனே
அம்புவியோர்தான்றுதிக்குமைந்துகரத்தோனே
குறவர்மலைபுனக்கடம்பன்முன்புவந்தகோனே
குவலயத்தோர்கொண்டாடக்குணமேனிதருள்வாய்
மலையாசன்புதல்வியுமையீன்றருள்குஞ்சரனே
வல்லபையிடத்தில்வைத்தமத்தகவித்தகனே
அலைகடலிற்பள்ளிகொள்ளுமானைமுகத்தோனே
அமரர்துதிசெய்யுமெங்களாரமணிமார்பா
இனியமாங்கனிவாங்கப்பரமசிவன்கையா
விடம்புரிவலம்புரியதாகவருமிறைவா
திசைமுகவன்சிரசறுத்தசிவனருள்சேர்புதல்வா
செம்பவளவாயனேதிருமகடன்மருகா
நவமணிபோலொளிபரவுநபனமதுமூன்றூல்
நம்பினர்க்குநாவலர்க்குநன்மையேதருவாய்
தவமுனிவோர்துதிபரவுந்தற்பரம்பொருளே
சந்ததமுமுனைப்பாடவந்துதவுவாயே.

## பதின்மர்துதி.

கலிப்பா

பூமேவுநீலவெற்பிற்பொன்னிறமுமுண்டெனப்பூ
மாமேவுமுக்கூடன்மாலழகர்பள்ளிசைக்கே
பாமேவுசொற்புரப்பார்பாவலரொன்றெட்டெழுந்து
காமேவுபத்தர்பத்துநாவலருங்காப்பாமே

## ஆஞ்சநேயர்துதி.

எண்சீர்க்கழிநெடில்

சந்த—விருத்தம்

தனதனதனத் தானனன் தானனன் தானத்தன்ன

மணிமாகச்சோதியாதியார்மனுமரபினிற்காவலக்கோவலர்
முறைமுதல்வர்முக்கூடலரேடலர்வாசத்துளவோர்

அணிபாவனைத்தூயவர்மாயவரடையவர் மனப்பூரணர்காரணர்
அழகர்பள்ளிசைப்பர்வளநவள்மாகத்தருவோர்
துணிவொடுதிருத்தாள்வலிகோள்வலிதுணையெனமுதற்கூறிய
சூர்பதிபகைக்கிளவிறுளகுராத்துடனேதேறிய
பணிவிடைசெயத்தானவர்வானவர்பழமகபதிப்பேரியல்சீரிய
பகரிளமுறைக்கோனெனவானெறிபாலிப்பவரே ௰

## சேனைமுதலியார்-துதி.

தானனதத்தானனதனனம் தய்யாதனனு.

பூவலயக்காவலனெனவும்பூவைநிறச்சேவையனெனவும்
போதனுமெட்டாதவனெனவும்பொய்யமறைதேர்
பாவலனுக்காவலனெனவும்பாரறியத்தாரணைசெயுமென்
பாடலின்முக்கூடலினழகர்பள்ளேகலிலே
தாவறுசொற்கேவலமுறினுஞ்சார்வுபொருட்சோர்வுகள்வரினுந்
தாள்விதத்தோளிகெடினுந்தள்ளார்புலவோர்
தேவர்முடிப்பூவடிபிரசச்சிலமணிக்கோலணையிலகுஞ்
சேனைமுதற்கோனைமுனிடிலென்செய்வார்பிறரே ௰௧

## நம்மாழ்வார்-துதி.

தத்தானத் தனதனதனதன தானனக்தனத்தா

வித்தாரக்கமலையைவிமலையைமெய்க்கோயிற்புரமிசையுரமிசை
மிக்காகப்பரிபவர்தெரிபவர்வேதசிற்பாத்தார்
முத்தேவிற்பெரியவர்கரியவர்முற்பான்மைத்தொழிலினமொழிலினர்
முக்கூடற்கழகர்மெய்யழகர்தமூவகைத்தமிழ்க்கே
பத்தாகப்பெயர்தருமுயர்தருபத்தாரிற்பருதியர்சுருதியர்
பட்டோலைக்கெழுதருமுழுதுரைபாவகத்துரைத்தோர்
நத்தோலக்குருகையில்வருகையினட்பாகப்புளிநடுவெளிபடு
நற்போதச்சுருள்பொழிதிருவிழிஞானவித்தனெற்கே. ௰௨

## கருடாழ்வார்துதி.

தானத்தன தானத்தனத் தனதனதனத்தா

த்ராசத்திருபேரிற்கலவித்தாசத்தினளகத்தருமென்
காலைப்புவிகாத்தடவத்தலையணைகொடுத்தே

ஆத்தனபாரத்திருவுற்றுசைப்படவோசைத்திரைநெட்
டாழிக்கிசையூழிச்சயனத்தழகர்பள்ளிசைக்கே
சோத்தனைபூரித்தகையச்சீரைப்பகர்வாரைக்கருதி
தேடித்திசையோடித்திரியத்திரமில்லாதற்கே
கோரச்சிறைவீரப்புயமுக்கூடற்பதியாடற்கருடக்
கோனைப்பெரியோனைப்பாவிற்குறைவில்லாமைக்கே ௰௧

பாயிரம்-முற்றிற்று.

---

## நூல்.

### கலிப்பா.

காவலார்தேவரைமுன்கைதொழுதுபின்னருமென்
னாவினாலேயழகர்சூரவளநாடு
சீவலனன்னுடிமிசைத்தேர்ந்துரைக்கப்பண்ணைதனில்
ஏவலரும்பள்ளியர்வந்தெய்தியதுசொல்வேனே ௰௪
செந்நெல்மிகவிளைந்தோங்குந்திருக்கூடல்மாநகரில்
தன்னைநினைந்துதயவுடனேபோற்றிசெய்து
அன்னநடைசம்பையெனஅழகிவித்திராணியைப்போல்
வன்னமுலைமுத்தபள்ளிவளமைபெறத்தோன்றினளே ௰௫

சிந்து-அடதாளம்,

---

பந்துவராளிராகம்.

நெற்றியிலிடுமஞ்சனப்பொட்டுமற்றொருதிருநாமப்பொட்டும்
நெகிழ்ந்தகருங்கொண்டைபிலிரண்டாய்வகிர்ந்தவகுப்பும்
பற்றியகரும்பொற்காப்புங்கையினில்வெற்றிலையும்வாயில்ஒதுக்கிய
பாக்குமொருகருகருளுக்கொருக்கால்நீக்குமிதழும்
வெற்றிவிழிக்கெதிர்கொண்டெதிர்கொண்டுற்றகரும்பின்னமதிர்ந்தால
விருந்திடுமென்றெண்ணிச்சற்றேசரிந்ததனமும்
சிற்றிடையுஞ்செம்பொன்னிடைக்கிடைபெற்றிடுபட்டாங்குமிலங்கத்
திருமுக்கூடலிபள்ளிதோன்றினளே. ௰௬

முத்துவர்ணச்சேலைகொய்திடையி-லுடுத்தி
மோகனமாகவொயிலாகநடந்து

அத்தமதில்வெற்றிலையைத்தட்டிமடித்து நல்ல
ஆசையுடனே சுருளைவாயிற்கடித்து
கொத்துமலர்மாலைதனைமெத்தமுடித்துகருங்
கோதிலம்போல்வார்த்தைசொல்லிராகம்படித்து
எத்திசையும்புகழுந்தனமுக்கூடற்பண்ணை யேவ
லேத்தருளுமுத்தபள்ளிதோன்றினளே. ௧௭

## தரு-முடுகு.

சேர்ந்தபிறைநுதலிற்செந்தூரந்தீட்டி இரு
செய்யகுழைகாதினிற்பணிகள்பூட்டி
காந்தியாய்வேல்விழிக்குமையுமூட்டி இரு
காற்சிவக்கநடைநடந்துகையைநீட்டி
மாந்தர்கள்மயல்கொள்ளாசைவலையைப்பூட்டிமுத்து
மாலையணிந்தகும்பத்தனத்தைக்காட்டி
வேந்தர்கள்வணங்குந்தெய்வம்வேளழகர்பண்ணைவயல்
வேலைசெய்யமூத்தபள்ளிதோன்றினளே. ௧௮

## கலிப்பா.

உள்ளத்திலூர்விடுமுல்லாசப்பார்வைவிழிக்
கள்ளத்தினுவிரும்புங்கல்லுங்கரையாதோ
வெள்ளத்திலேதுயில்கார்மெய்யழகர்முக்கூடற்
பள்ளத்தியாரழகுபார்க்கமுடியாதே. ௧௯

செகமதனையுண்டழகர்திருக்கூடல்மாநகரில்
தகதகனவேவதனசந்திரோதயம்போலே
வகையுடனேதானிலங்கும்வாலமோகினியிளையாள்
மகிமையுடன்தேன்மருதூர்வஞ்சியும்வந்தெய்தினளே. ௨௰

## சிந்து.

---

ரூபகம்-பயிரவி.

செஞ்சாணைப்படமிடுகொச்சியின்மஞ்சளும்பூப்பச்சையுமணக்கச்
சிறியநுதற்பிறைவெண்ணீற்றுக்குறியொளிவீச
பஞ்சலைமீன்கெண்டைகளெனவேயஞ்சனஞ்சேர்கண்களிரண்டும்
பக்கக்கொண்டையினுங்குழையினுந்தக்கக்குறிப்போல்.

நெஞ்சுகவர்கன தனமாமதகுஞ்சரவனைக்கோடுகளசைய
நீலவடங்களுடன்கோவைத்தாலியுமிலங்க
வஞ்சிமருங்கிலணிதருபட்டும்பஞ்சவண்ணத்தழகுந்துலங்க
மருதூர்க்குவாய்த்தபள்ளிதோன்றினளே. (௨௧)

தரு-முடுகு.

வாசமிகுங்குழல்கோதிமலர்கள்சூடி
வண்மைமிகுமுலைசற்றேகாட்டிமூடி
நேசமுடன்வீணையில்பதங்கள்பாடி-உலகில்
நேரிழைமார்தான்புகழநேசமோடி
ஆசையுடன்வாவிபானேகங்கூடி-நின்
றடியேவணங்குவர்கள்சண்டுநாடி
தேசம்புகழழகர்தென்கூடல்மாநகரில்
தெள்ளமுதச்சொல்லிளையபள்ளிவந்தாளே. (௨௨)

கலிப்பா.

ஆதிமருதீசருக்கும்ஆட்பட்டழகருக்கும்
பாதியடிமைப்படுபோபள்ளிமருதூரிளையாள்
சோதிமுகமள்ளருக்கேதோன்றவயலூற்றுநட்ட
போதிலொருபூவிளைந்தப்பூவும்பயிராமே. (௨௩)

விருத்தம்.

தெரிவையர்திலதம்பூண்டசிறந்ததோரிளையபள்ளி
மருவணமுளரிமாதுவடிவெனநின்றகாலைத்
திருமகளுலவுமார்பன்சீதான்றேவதேவன்
கருணையால்வளரும்பள்ளன்களரியிற்றோன்றினனே. (௨௪)

தரு.

சறுக்குந்தோறுங்குதிப்புஞ்சுறுக்குத்தலையசைப்புந்
தாடிச்சுத்தியேப்பமிட்டடிவைப்பதும்
மறுக்குமதுவெறிகொண்டுறுக்குஞ்சிரிப்புந்தோன்றும்
வடிவழகக்குடும்பனையானேயாண்டே. (௨௫)

ஒருபோதழகர்தாளைக்கருதார்மனத்தையன்பில்
உழப்பாக்குத்தரித்தின்றுகொழுப்பாச்சுவேன்
கருதியிதொழுத்தாண்மைப்பெரியநம்பியைக்கேளாத்
துட்டர்செவிபுத்தெனவேகோட்டால்வெட்டுவேன்
பெருமாள்பதிநூற்றெட்டுமருவிவலஞ்செய்யார்தம்
பேய்க்காலைவடப்பூட்டியேர்க்கால்செய்வேன்
திருவாய்மொழிகல்லாரையிருக்கால்மாடுகளாக்கித்
தீத்தியென்றுழக்கோல்கொண்டுசாற்றுவனாண்டே. (௨௬)

### கோமாளிசொல் கலிப்பா.

தேசமெல்லாந்தான்புகழுந்தென்கூடல்மாநகரில்
வாசமுடனேயிருக்குமாலழகர்பதம்போற்றி
நேசமுடனேநிஷ்டைநீதியதுதான்முடித்துக்
கோசிகன்போற்றடியூன்றிக்கொலுக்காரன்றோன்றினனே. (௨௭)

### தரு.

பேழிக்குல்லாவமிட்டுவெள்ளைநிசாறுந்தொட்டு
விந்தையாகப்பட்டநாமந்நெற்றியிலிட்டு
தாழிவயிறுந்தொந்திதள்ளாடவேமெள்ளத்
தளர்ந்தநடையுந்தடியுமூன்றிக்கொண்டு
ஆழிசூழுலகம்போற்றுமழகர்பதத்தை-யொரு
அநுதினமுமறவாமலன்பாய்ப்போற்றி
லளிதமாய்வார்த்தைகள்பலவும்பேசிநல்ல
இங்கிசைந்தகொலுக்காரன்றோன்றினனே. (௨௮)

பச்சைகுல்லாவுமிட்டுநாமமுமிட்டு—காதில்
பண்புடனே அனுமசேர்வைகுண்டலமிட்டு
உச்சிதமாய்க்குப்பாயமுங்கச்சையுங்கட்டி
யுட்கழுத்திற்றுளசிமணித்தாழ்வடங்கட்டி
பச்சவள்ளக்கால்தனிலேகெச்சமுங்கட்டி
மலர்ந்தமங்கிணியெருதுபோலேகிங்கிணிகட்டி
அச்சுதனற்முக்கூடற்பண்ணைக்குமிக்க
ஆதினத்துக்கொலுக்காரன்றோன்றினனே. (௨௯)

பச்சரிசிபோலவெந்தன்பல்லைபாருங்கோ
பாங்கானசொல்லழகன்வாயைப்பாருங்கோ
நிச்சயமாய்க்கொண்டைக்கட்டழகைப்பாருங்கோ-எந்த
னீலவிழிகண்கள்ரண்டும்நேத்திபாருங்கோ
பச்சாவியென்முதுகுமாரைப்பாருங்கோ
வயிறுடையென்ஜென்னமெல்லாநீங்கள்கேளுங்கோ
முத்துககடுக்கனெந்தன்மோகனமாலையைக்கண்டு
முக்காட்டுடனேவந்துசைசைபேசுருள்
எத்திப்பசப்பியென்னையேய்க்கிறதுக்கு
என்மீதில்குத்துமுலைவைத்தழுத்துருள்
சிற்றுத்தைபெரியாத்தைநீங்கள்சொல்லுங்கோ—இந்தச்
சீமாட்டிசெய்கிறஞாயங்கேளுங்கோ
கிருஷ்ணசுவாமிதன்வரத்தால்வந்துபிறந்தேன்—என்பேர்
கிங்கிணிக்கோமாளியல்லவோ

பாலநகர்தன்னில்வாழுங்கண்ணகையம்மனிரு
பாதமலர்வழுத்தினம்பாடிக்கொள்வோமே. (௩௰)

பண்ணைக்காரன்சொல்—கலிப்பா.

பள்ளியர்பள்ளரோடுபரிவுடனிதங்கள்பேசி
கள்ளமில்லாமல்வந்துகளிப்புடனின்றகாலை
தெள்ளிநீர்த்துயிலுமாயன்றேவர்தன்கற்பனைக்கு
விள்ளமேதார்பண்ணைதன்னைவிசாரிப்போன்றோன்றினனே. ()

தரு.

தங்கக்கச்சையுருமாலைதலைதனிற்கட்டிப்—பட்டுச்
சாலுவையெடுத்துமார்பில்வல்லாவட்டிட்டு
சங்குசங்காக்கடுக்கனிருகுழைதனிலாட—தலை
தானசைத்துமேல்மீசைமுறிக்கி
செங்கமலவிழிமார்பன்சிந்தைமகிழ்ந்திடவே
செங்கோல்முத்திரைமோதிரஞ்சேரவேவாங்கி
பொங்குமிகும்வடகரைவாழ்பள்ளர்வீறடக்கப்
புதுப்பண்ணையாண்டவனுந்தோன்றினனே. (௩௨)

மூத்தபள்ளிமுகம்பார்த்துவார்த்தைசொல்வாரும்—பெரு
மூச்சுக்கொண்டிளையபள்ளிபேச்சைக்கேட்பாராம்
சாத்திமகள்காத்திதனைப்பேத்தியென்பாராம்—மெள்ளச்
சன்னையாய்க்களத்தினில்வாபின்னையென்பாராம்
வாய்த்ததடிக்கம்பையூன்றிசாற்றிநிற்பாரும்—ஊத்தை
வாய்க்குப்புகைகுடிக்கதிக்குப்போவாராம்
காத்திராதபள்[illegible]வாமாத்தியென்பாராம்—மெள்ளக்
கண்ணைச்சாய்ப்பார்முக்கூடற்பண்ணைக்காரர்வந்தார். (௩௩)

மூத்தபள்ளியோடுபள்ளன்சொல்—கலிப்பா.

கஞ்சமலர்க்கண்ணார்பண்ணைக்காவலுந்தனைவலினல்
தஞ்சமென்றுவந்தபள்ளன்றன்வணங்கவேநயினர்
வஞ்சியெனுமூத்தபள்ளிவந்திலையென்றேவல்கொள
அஞ்சிபள்ளன்முக்கூடற்பள்ளியையழைப்பானே. (௩௪)

கண்ணிகள்.

கருணைமாலழகர்தன்கட்டளைப்படிகேட்டு
வரும்பண்ணையாண்டாரைவணங்கிக்கும்பிடுவோம்
வணங்குவோமென்றுநீமாயத்தொழில்செய்யாதே
குணமாய்மருதூரானைக்கூட்டிக்கும்பிடப்போ

கும்பிடப்போமென்றுகோபமாய்ச்சொல்லாதே
இன்பமாய்மூவருமிசைந்துகும்பிடுவோம
இசைந்துகும்பிடுவோமென்றென்முன்சொல்லாதே
கசந்துபாற்குடிப்பதகாரியமோகணவா
காரியநீசொன்னபடிக்குகூடப்பண்டி
பாரியானமூத்தபள்ளிநீவாடி
வாடிபள்ளியென்றுவருந்துந்தொழிலறிவேன்
பாடிவார்த்தையென்முன்பகராதேகணவா
பகராதேயென்றெனைப்பரியாசம்பேசாதே
நகையாரோவுந்தனைநானிலத்தோர்கள்
நாநிலந்தனிலுந்தனடத்தையறியாரோ
போநீயென்முன்னின்றுபுலம்பவேவேண்டாம்
வேண்டாம்போவென்றெனைவெறுத்தாலேதலைவாசு
லாண்டார்கோபித்தென்னையாக்கினைசெய்வார்
ஆண்டார்கோபிப்பாரென்றுஅன்புடன்சொல்லாதே
ஆங்காரந்திரட்டுமாக்கினையாலே
ஆக்கினைசெய்தவமானம்வருமலே
காப்பதுனதுகடன்மூத்தபள்ளி. (௩௫)

பள்ளனோடுமூத்தபள்ளிசொல்-கலிப்பா.

கொஞ்சுங்கிளிமொழியாள்கோதையவள்மனமகிழ்ந்து
தஞ்சமதையழகர்பண்ணைதர்மநெறிதவறாத
வஞ்சகமிலாதழகர்வடிவுடையபண்ணைதனிற்
பஞ்சவர்னமூத்தபள்ளிபள்ளனொடுசொல்வாளே. (௩௬)

தரு.

செஞ்சொல்வாணர்புகழுந்தென்கூடல்
திருவழகர்தன்பண்ணைதனிலே
தஞ்சமென்றவர்பாக்கியத்தாலொரு
தாழ்வில்லாமற்றழைத்திருந்தோமே
கொஞ்சிக்காரிமருதூருப்பள்ளியைக்
கூட்டிவந்தென்னைக்கோட்டிகள்செய்தாய்
வஞ்சமாயுன்னளப்பையறிந்தேன்
மார்க்கஞ்செய்கிறாய்மாமாலப்பள்ளா. (௩௭)

மூத்தபள்ளியுடன் பள்ளன்சொல்-தரு.

என்னசெய்குவேன்மதியேழைபோனேனடி
யென்னசொன்னாலுந்தன்னையல்லாமல்
அஞ்சலாளும்பண்ணைநயினார்வந்
தழைக்கிறாங்கேயேபோகாதேபோனாற்

கெஞ்சக்கெஞ்சஅடித்திடுவாய்ப்
கீர்த்தியினம்வந்தாலுனக்கே
நெஞ்சினிற்பகைவையாதேயென்செய்வே
னிட்டூரம்வேண்டாமுக்கூடப்பள்ளி. (௩௮)

பள்ளனுடன்மூத்தபள்ளிசொல்-தரு.

இந்நாள்வரையென்னைமுடிக்கி
யிளையபள்ளியெல்லாஞ்சுகித்தாளே
அந்தககாரன்பண்ணைநயினார்வந்
தடிப்பாரென்பதினாலல்லவழைத்தாய்
விந்தைக்காரிதன்சாமார்த்தியமெல்லாம்
விநோதமென்பதுஇப்பல்லவோவேனுஞ்
சொந்தக்காரிமருதூருப்பள்ளியைச்
சொல்லிப்பண்ணைநயினாரைக்கும்பிடு. (௩௯)

மூத்தபள்ளியுடன்பள்ளன்சொல்-தரு.

எதுசெய்குவேன்வாதுமிகச்செய்தா
லென்றலைவெழுத்தின்படியே
மாதுநீயன்றிவேறெனக்கில்லை
வைப்புஞ்செப்புமுனக்கல்லோசேரும்
ஆதலாலினிப்பண்ணையக்கா
னழைப்பதுண்டுன்னையல்லாமல்நான்போகேன்
சூதுவேண்டாமினிமுக்கூடற்பள்ளி
தொழுதுபண்ணைநயினாரைக்காண்போம். (௪௰)

பண்ணைக்காரனைப்-பள்ளனும்-பள்ளியரும்
கும்பிடு-தரு-கலிப்பா.

கள்ளவிழ்மாலைமார்பன்கார்வரைமேனியாளன்
வெள்ளமேற்றுயிலுமாயன்விமலனாழகர்நாட்டிற்
கொள்ளவேவந்தமேன்மைகோன்பண்ணையானைக்கண்டு
பள்ளியர்பள்ளரோடும்பரிவுடன்வணங்குவாரோ. (௪௧)

தரு.

கும்பிடுகிறோமாண்டே கும்பிடுகிறோமெங்கள்
குடும்பனுநாங்களுமாய்க்கும்பிடுகிறோம்
நம்புமடியார்கள்தம்மைச்சம்பிரமமாக
ரட்சிக்கும்நாயகனைவலம்வந்துகும்பிடுகிறோம்
கொப்புமுறித்தானைகொண்டமாலழகர்தாட்
கொண்டபண்ணைக்காராவுன்னைக்கும்பிடுகிறோம். (௪௨)

மெய்யானவாசகனைக்கும்பிடுகிறோமெங்கள்
மேன்மைதருமாண்டவனைக்கும்பிடுகிறோம்
கையாரவாழ்த்தியுன்னைக்கும்பிடுகிறோமழைக்
காமுகாபண்ணையாண்டேகும்பிடுகிறோம்
மைவிழியாள்மன்மதனைக்கும்பிடுகிறோமெங்கள்
வரிசைதருமாண்டவனைக்கும்பிடுகிறோம்
ஐபாழகர்பாதமெந்நாளுமறவாத
ஆண்டவனைவலம்வந்துகும்பிடுகிறோம் (௪௩)

கலிப்பா.

பள்ளர்குலத்தில்வரினுமிருபள்ளியர்க்கோர்
பள்ளனணைவனெனிற்பாவனைவேறாகாதோ
கள்ளப்புள்வாய்க்கிழித்தகாரழகர்முக்கூடல்
கொள்ளத்தமுதுகுடித்தாங்கள்கூறினரே. (௪௪)

சிந்து-அடதாளம்-காம்போதி.

உத்தாபாகமானசித்திரநதிக்குள்தென்பால்
ஓடும்பொருனையுடன்கூடும்போதே
பத்தனைகாலமுந்தொட்டுவித்தனைகாலமுங்கண்டு
அடியடிவாழையாய்க்குடியில்வந்தேன்
பத்திலேபதினொன்றாய்வைத்தானெனைக்குடும்பன்
பண்டேசாடுகட்டிக்கொண்டானென்னை
முத்தமிழ்நாட்டழகர்கொத்தடியருக்கான
முக்கூடன்மூத்தபள்ளியானேயாண்டே (௪௫)

தரு-முடுகு.

கல்லைப்பெண்ணாக்கிவைத்துவில்லைமிகமுறித்துக்
கமலமுகமும்விழிவிமலர்பதம்
வல்லமிகும்வாலியையுமெல்லையுமாக்கடலையும்
வந்தகும்பகர்னனொடுஇந்திரசித்தும்
அல்லல்புரிசஞ்சனையும்வெல்லவருஞ்சனையும்
அன்றுபோர்புரிந்தவகையின்றுசிறந்தோன்
பல்லவஞ்சிறந்தவடிபொன்மகள்மணாளனிரு
பதம்பணியுங்கோவிந்தப்பள்ளிகாணாண்டே (௪௬)

இளையபள்ளிகுடித்தாஞ்சொல்-கலிப்பா.

மாலார்ந்திருவழகர்வாழ்ந்திடுமுக்கூடலிலே
கோலாகலாய்க்குடித்தாங்கள்கூறுதற்குக்
காலால்நமனைவென்றகாரணர்மேற்பத்திமிகும்
பாலாமொழியருதூர்ப்பள்ளியும்வந்தெய்தினளே. (௪௭)

செஞ்சிக்குங்கூடலுக்குந்தஞ்சைக்குமாணைசெல்லுஞ்
செங்கோல்வடமலேந்திரனென்னுமோ
நெஞ்சிக்குழித்தகுழன்மஞ்சிக்குஞ்சாக்கணைக்கல்
நிலையிட்டநாளிப்பண்ணைத்தலையிட்டநாள்
கிஞ்சிக்குந்தன்னிலேதான்கெஞ்சிப்புகுந்தவன்னல்
கண்டாசைப்பட்டேகொள்ளும்பெண்டானவள்
மஞ்சிற்றுகறுப்பழகர்தஞ்சைப்பள்ளனுக்கேற்ற
மருதூரிளையபள்ளியானேயாண்டே. (௪௮)

## தரு-முடுகு.

சேவற்கொடியனுக்கும்ஆகுவாகனனுக்குஞ்
செய்யநிறத்தந்தையானசெக்கர்நிறத்தோன்
ஆவலுடனேயமரர்அமுதங்கடைந்தவன்று
"ஆலமுமுண்டமரருக்கமுதமளித்தோன்"
காவலனுந்தென்மதுரைபாண்டியன்கன்னியைக்
கண்டுமணமாலையிட்டகர்த்தனானோன்
பாவலர்க்கருள்புரிவோன்பாதமறவாமல்வாழும்
பள்ளன்கொண்டசிவபத்திபள்ளிநானுண்டே. (௪௯)

சுக்கிரதேவர்தாயைச்சக்கரத்தாழ்வார்கொண்டு
துட்டப்பாமதத்தைவிட்டுப்போக
தெக்கணம்விட்டுநுவன்முக்கூடலுட்டழகர்
திருவடின்வக்குமன்றேவருமடியேன்
பக்கமேதூரப்போவென்தக்கன்சொல்வெள்ளாமை
பள்ளாபள்ளாவென்பர்மெக்கொள்ளாதவர்
மைக்கடன்முத்துக்கிடாய்மிக்கநென்முத்துண்டாக்கும்
வடிவழகக்குடும்பன்யானேயாண்டே. (௫௰)

தென்னிலங்கைதன்னிற்போசச்சீதைபொருட்டாலன்று
சேதுபந்தனஞ்செய்யத்தொட்டுநாளில்
பொன்னிலங்குமாமதிளுமின்னிலங்குமுக்கூடற்
புக்கநாட்பண்ணையாகப்புகுந்தேனையா
இந்நிலங்கடன்னிலுள்ளஇறையோர்கள்வந்துதொழ
எங்களழகர்பண்ணைசொந்தமாக
மன்னிலங்கடன்னிலுள்ளபள்ளர்குலத்துதித்த
வடிவழகக்குடும்பனானேயாண்டே. (௫௧)

## கலிப்பா.

கோட்டுவளங்கூறியமுக்கூட்டலலங்காரர்திரு
நாட்டுவளம்பேசமணிநாவசைத்தார்பள்ளியர்கள்

பாட்டுவளஞ்சேரகுலபத்தனூர்பாலிசைப்பூங்
காட்டுவளமெல்லாங்கருமருதூர்செய்வாரே. (௫௨)

நாட்டுவளம்—சிந்து.

அடதாள—சங்கராபரணம்.

மேடையேறித்தன்கலாபமிஞ்சவிரித்தபீலி மயிலெட்டிப்பார்க்கப் பேடைமான்குயில்வாய்கொண்டுசெவ்வப்பிளந்தவாய்த்தனைப்பேசாமல் மூடச், கோடைபோய்விட்டசோபனங்கொண்டுகுளிர்ந்தகொன்றைகுறுந்தளிரோடை, வாடையோடிவாக்கோழி கூவுவதும்வளமையார்சூரவடகரைநாடே. (௫௩)

வென்றலோவிடுவேனென்னவேளிநவேழங்கூடி மதிக்குடைதாங்க, குன்றவர்தனிவில்லையென்றுடவர்கொம்பனார்மூலைக்குன்றிற்புதுமென்றல்சேரிளம்வேனிற்புறுக்கள்மாங்குயிலுக்கு மாறுயஞ்சொல்லி,தென்றலோடிவாக்கோழிகூவுவதுஞ்சீவல்மங்கைதென்கரைநாடே

கொண்டல்கோபுரமண்டையிற்கூடுங்கொடிகள்வானம்படிதாமூடும், கண்டபோண்டந்தண்டலைநாடுங்கனகமுன்றிலனம் விளையாடும்விண்டபூவனுமண்டவிட்டோடும் வெயிலிவ்வெய்யோன் பெண்ணனவளிதேடும், அண்டநாயகர்,செண்டலங்காரழகர்,முக்கூடலூரெங்களூரே.

சங்கமேடைக[illegible]ங்குமுலாவுந்தாங்கமீன் பொன்னிடைக்கிடைதா[illegible] திங்கள்சேலைமாங்கிளைதாவுந்தெருக்கடோறு மதுக்களைத்தூவுபொன்னூரிளம்பங்குனிமேவுபூவைமாடப்புறுவைமுன்கூவும்,வங்கவாரிதிவெங்கதிர்பூண்டமருதுசேர்மருதூரெங்களூரே. (௫௬)

சறைபட்டுள்ளதுவெண்கலைத்திங்கள் கறைப்பட்டுள்ளது சப்பத்துமேழுஞ், சிறைபட்டுள்ளதுவிண்ணெழும்புள்ளூ சிரிபட்டுள்ளதுநெய்படுதீபங், குறைபட்டுள்ளதுகம்மியர்சமிகுழைபட்டுள்ளது வல்லியங்கொம்பு, மறைபட்டுள்ளகரும்பதஞ்செய்யுமழைமையார் சூரவடகரைநாடே. (௫௭)

காயக்கண்டது சூரியகாந்திகலக்கங்கண்டது வெண்டயிர்க்கண்டம்மாயக்கண்டதுநாழிகைவாரமறுகக்கண்டதுவான்சுழிவெள்ளஞ், சாயக்கண்டதுகாய்ச்,குலைசெந்நெல்கனிப்பக் கண்டதுதாபதருள்ளந், தேயக்கண்டதுரைத்திடுஞ்சந்தஞ்சீவலமங்கைதென்கரைநாடே. ()

சோதிமாமணிவீதிநெருக்குஞ்சுரும்புபாடியிரும்பையுருக்குஞ்சாதிசால்வளர்நீதிபெருக்குந், தடத்துவாளைகூடத்தைநெருக்கும் போதின்மேய்ந்திளமேதிசெருக்கும் புயமெலாந்தண்மலர்விண்டிருக்கும்ஆதிநாராயணதிபொருத்தழகர்முக்கூடலூரெங்களூரே. (௫௯)

தத்தும்பாயபுனல்முத்தமடைக்குஞ்சாலைவாய்க்கனிபாலையுடைக்கும், தத்தும்பேரிசைச்சதங்கைப்புடைக்குஞ்சவிப்புவேலையொலிப்புற்றுடைக்கும், சித்தஞ்சாராயஞ்சித்திரம்படைக்குநிதியெலாந்தன்பதியிற்கிடைக்கு முத்தகுடுமேதோன்மத்தான்மருதுசேர்மருதூரெங்களூரே

மீதுயர்ந்திடு தெங்கிளநீரை மிடைந்தபூங்கமுகாந்து வதன்காய்,குதபோன் றுசுமக்கக்கொடுக்குஞ் சூதகன்கனி தூங்கும்பலாவில்; ஓதுமந்தப்பலாக்கனிவாழை யுளுக்கவேசுமந்தெண்குலைசாய்க்கும், மாதுளங்கொம்புவாழையைத்தாங்கும் வளமையார்சூரவடகனாநாடே. (௯௧)

பங்கயந்தலைநீட்டிற்குப்பையின்பச்சையிஞ்சியிற் பாசடைவிட்டுத் தங்கவிஞ்சையின்மஞ்சள்கழுக்கைத் தடவிமெள்ளத்தொமெந்தமஞ்சள், அங்குயர்ந்திடுங்காய்க்குலைநெல்நெல்ளவிதிற்குமச்; செந்நெனுகப்பால்,செங்கரும்புக்குங் கைதரும்பேரல்வளர் சிவலமங்கைதென்கரைநாடே. ௯௨

கலிப்பா.

தேவாதிதேவர்திருமுக்கூடலம்பொருளை
நாவால்வழுத்துமிக நாட்டியல்புகூறியதே
பூவாசனைசேர்புரிகுழலார்பூங்கொடியைக்
கூவாயென்னந்தக்குயில்மொழியைக்கொண்டாரே (௯௩)

சிந்து

சம்பைதாளம்.

ஆனந்தபைரவி;

கார்பூத்தவண்ணனார் கண்ணனாரழகர்படிகட்டளைக்ளுபாவேகூவாய்குயிலே,பேர்பூத்தமுக்கூடல் மிக்கராமானுஜப்பீடமிகவிளங்கவேகூவாய்குயிலே,பார்பூத்த கீர்த்திபெறும் வயிணவருந்தானிகரும்பரிசனமும்வாழ்கவேகூவாய்குயிலே,சீர்பூத்தவருவிவரு திருமலைக் கொழுந்துமுகில்செங்கோன்மைபோங்கவேகூவாய்குயிலே (௯௪)

சீவலப்பெரியதமிழ் மூவகைக்கல்வியுஞ்செல்வமும் பெருகவேகூவாய்குயிலே,மாவனத்துடனழகர் தாவளக்குடிவாழ்க மருதூரைவாழ்த்திடேகூவாய்குயிலே,பாவலர்க்குபகாரி கருவையம்பலவாணன்பலநிலையுந்தழைக்கவேகூவாய்குயிலே, காவலர்க்குயர்பெருமைமேவுதேர்ப்பாழைகர் கட்டளைகள்தழைக்கவேகூவாய்குயிலே, (௯௫)

பொருநைநதிசூழ்ந்திலகு நகரியிருபாலும் பூஞ்சாலிவிளையவேகூவாய்குயிலே, அருள்பெருந்தருமநிதி சாத்திரிப்பெரியநம்பியையங்கார்வாழ்கவேகூவாய்குயிலே, பெருவளந்தருநாடுதிகைகள்மும்மாரியும்பெய்யமனைவளம்பாடிகூவாய்குயிலே,கருநெடும்புலிழகர் மருவுசந்நிதிகற்ப கோடிகாலம்விளங்கவேகூவாய்குயிலே, (௯௬)

முத்தபள்ளி-பண்ணையாண்டவனுடன்-சொல்லுதல்,

தஞ்சைசமையாபண்ணை யாண்டவரேசற்றேகேளும்பொங்கல்
நானிடச்சொன்னச்செலவிற் பிரட்டுகேளாண்டே
வஞ்சமிகுமருதூராட்குமுன்னே நெல்லளந்தான்றகை
மாத்திரம்பார்த்தாற்சிலகையாயிரமுண்டாண்டே-எனக்
கஞ்சுமாக்காவிட்டாறுகலங்கணக்கீய்ந்தானத்தை
யாராய்ந்துபார்த்தாலடியாள சொல்விபரமறிவீர்
பஞ்சமாபாதகஞ்செய்குடிகேடன்கோற்காரனிப்
படிசெய்தாற்பொங்கல்காணெப்படிப்பாவிப்பனாண்டே, (கூஎ)

கலிப்பா.

காரிப்பிரான்புதல்வர்வில்வித்தமிழ்வேதம்
பாரித்தமுக்கூடற் பண்ணவனார்னாட்டில்
மாரிப்பொருட்டால் வரங்குறித்துமள்ளர்பெருஞ்
சேரிக்குரவையிடத் தெய்வமிலைபோற்றினரே, (கூஅ)

தரு,

கலங்களெடுங்கோ-சின்ன-குடங்களெடுங்கோ
கன்னிமார்க்கேற்கரெண்டு-காதுமெடுங்கோ
செலம்பெரியநதிதனிலே குளித்துவாருங்கோ
சித்தரக்கையிடுங்கோ-காதிற்சேர்க்கையிடுங்கோ
அலங்கரியுங்கோதெய்வந்தை-யாதரியுங்கோ-நல்ல
ஆரபாரக்கலவைபிட்டு ஆடிப்பாடுங்கோ
குலம்பெரியவாமுதவு முக்கூடலழகர்பண்ணைக்
கோத்திரமெல்லாந்தழைக்க வாழ்த்திப்பாடுங்கோ. (கூகூ)

வேறு தினதெந்தினா,

மாதுமங்கையபனெக்கூடியே மழையானதுபொழிய
வாசவன்றனக்கானபூசைகள் உசிதைமிகச்செய்வோம்
நாதமாமுகப்பிள்ளையாருக்கு வேதமாமறையோதும்
நம்பியார்கையிற்செம்பொனுடைகள்கும்பதக்ஷணைகொடுத்து
வேதசாஸ்திரமோதுவார்முறை நீதியாகவேநடத்தி
வெற்றிவேல்மயில்வாகனர்க்கு விதமாய்ப்பூசைமுடிப்போம்
பாதபங்கயத்தழகர்பதம்போற்றிச் செந்நெல்விளையப்
பள்ளர்பள்ளியர்மிகக்கூடியேபரிவாய்ப்பொங்கலிடுவோம்

குங்குமத்தால் நிலமெழுகிக்குலவையிட்டு-நல்ல
குளிர்ந்தபுனல்முழுகிவந்து கோதைமார்களெல்லோருமே
மங்கைபார்வதிபாலன்றன்னை வாழ்த்திப்பூசைமுடித்து
வடக்குவாசற் செல்விபமனைப்பொங்கல்வைத்தேபோற்றிக்
[கொள்வோம்

செங்கரும்புஇளநீர் பழந்தேங்காய்மிகக்கொண்டு
தெய்வங்களைப்போற்றிவந்துசெங்கெல்விளைய
பொங்கமாகவே பொங்கற்போடவே பூம்பந்தலுமிட்டுப்
பொன்னுல்மலர்தூவிநாமும் புகழ்ந்தேபாடிக்கொள்வோம்

இந்து

அடதாளம்-புன்னாகவராளி.

திங்கள்மும்மாரியுலகெங்கும்பெய்யவே தெய்வத்தைப்போற்றிவந்துகைதருங்காண், பொங்கலுமிட்டுதேங்காயுங்கரும்பும் பூலாயுடையார்க்குசாலக்கொடுங்கள், குங்குமத்தோடுஞ்சந்தனங்கலந்து குமக்கர்யுடையார்க்குச்சாத்துங்கள், கங்கணங்கட்டியே யேழுசெங்கடாவுங்கறைபடிச்சாத்தர்முன்னேவிரையவெட்டும், பூக்தத்தலைச்செஞ்சாவல்சாத்திரத்தாலே புலியூருடையார்கொள்ளபலிதானிடும்வாய்த்தச்சாராயமுஞ்சாணத்திகளும் வடக்குவாய்செல்வியுண்ணக் குடத்தில்வையும் தோத்திரம்பண்ணுங்கூத்தாடிக்கைதொழுதுகொழுதுவேண்டுமழை பெய்யவே யேத்துமழகர்யேனா வாழ்த்திபேயெல்லாரும்வரும் பள்ளரெல்லாருமே (௭௨)

கொண்டல்வண்ணன்றங்கையான குயில்வாய் மொழியம்மைக்குக்கொண்டாடியேயிரண்டாயிரந்தேங்காய்பழம்படைப்போம், பண்டருள் புரியுநமதுபார்ப்பதிமுப்புராரிக்குப் பாற்பொங்கலும்பழந்தேங்காயும்படைத்தேபோற்றிக்கொள்வோந் கொண்டுசெய்து மழைநன்ருய்ப்பெய்ய அண்டருநன் மங்கைமாதர்களும் ஆகமாமிகக்கொண்டு அழகாகவேமழைபெய்யவேபன்பாய்ப்பொங்கலிடுவோம (௭௩)

பொங்கலிட்டுத்தெய்வமதைப் போற்றிவணங்கிப்
புதியவனும்பேர்பெரிய உதிரமாண்டன்
எங்கள்குலதெய்வமதற் கேற்றகிடாவிங்கிருக்க
இலயபள்ளினடியிசபொதக

நங்கைமார்கள்சாத்தியர்க ளெத்தரத்திற்பள்ளியர்கள்
நாகரீகப்பேச்சுதானு லேசவேசெய்தாய்
பங்கமழிப்பேனென்றுசுரு பரிசுமழிப்பேனிது
பார்த்தவர்க்குவெற்றிடுமோபண்ணைபாண்டே, (௭௪)

பூவாடையாரேவந்திறங்கிகசோ யெங்கள்
புதுக்குடிவாழ்சாத்தாவே வந்திறங்கிக்கோ
மாலானமங்கைகன்னி வந்திறங்கிக்கோ
வடக்குவாசற்செல்லியம்மை வந்திறங்கிக்கோ
ஆலடிக்கறுப்பே வந்திறங்கிக்கோ-எங்க
ளாதீனத்துக்குடையவளே வந்திறங்கிக்கோ
லீலாவிதங்கள்செய்யும் வாவழகப்பள்ளா-வுனக்
சேத்தினதுபோதுமின்னம் வேணுமோபள்ளா. (௭௫)

பள்ளன்-புலம்பல்,

நிறுக்குடியேதெய்வத்தை நிறுத்தடியேபள்ளி
நிஷ்டூரஞ்செய்யவேண்டாம் நிறுத்தடியோ
வருந்தமின்னபடியென்று நானென்சொல்வேன்-பள்ளி
வாட்டுதென்னைப்பம்பரம்போ லாட்டுதடியோ
ஒருத்தர்துணையில்லையெனக் குன்னையல்லாமற்-பள்ளி
ஊதாரிமருதூரானதா னுன்போல்வருமோ
பொறுத்தருளுமென்றுதெய்வத்தைநினைந்துதிருநீறு
போட்டால்நிற்குமிக்ஷணமுக்கூடற்பள்ளி, (௭௬)

தலைசிறுத்துவுடல்வெடுத்து நடுநடுக்குதே-யெந்தன்
சஞ்சலத்தையென்சொல்வேன் றஞ்சமுனக்கே
மலைநிகர்த்தவிருதனத்திற் களபமணிவேன்நல்ல
வாசமுள்ளசந்தனத்தைப்பூசியணைவேன்
நிலைதரித்ததெய்வமதை யிறக்கிவிடடி-நீயும்
நினைத்தபடியுன்மனைக்கு நான்றனித்துவருவேன்
அலைகடலிற்பள்ளிகொள்ளு மழகர்திருவருளதனால்
அனுப்பிவிட்டதெய்வமதையிறக்கிவிடடி, (௭௭)

கலிப்பா,

முத்திதரவந்ததிரு முக்கூடன்மாதவர்தாள்
பத்திமறவாதபண்ணைப் பறைச்சேரிப்பள்ளரெல்லாம்
புத்தியோடுதெய்வநிலை போற்றியமுன்வாழ்முகிலே
யெத்திசையும்பெய்யமழை யெனக்குறிபுண்டாகியதே. (௭௮)

### தரு.

மேகமெல்லாமொன்றாய்க்கூடி தான்கறுக்குதேமெத்த
மின்னல்மின்னிவாசவன்கை வில்லெடுக்குதே
நகரீகப்பொதிகைமலைக்காற் றடிக்குதேகொண்டல்
நாலுதிக்குங்கோடையிடி தானிடிக்குதே
ஏகபோகமாமரத்திற்குயில்கள் கூவுதே-மழைக்
கேற்றமாஞ்சொரித்தவளை கூப்பிடுகுதே
ஆங்கயினுமெங்கள்திரு முக்கூடல்மாநகரில்
அந்திநேரமெல்லா மழைவந்துபெய்யுமே (௭௯)

### சிந்து,

அடதாளம்-ஆனந்தபைரவி.

ஆற்றுவெள்ளம்நாளைவர தோற்றுதுகுறிகாண்மழை
யாளமென்னநீளமென்னசூழ்மின்னுது
நேற்றுமின்றுகொம்புசுற்றிக்காற்றடிக்குது கேணி
நீர்ப்படுசொரித்தவளைக்கூப்பிடுகுது
சேற்றில்ஞெண்டுசேற்றின்குழியேற்றடைக்குது மழை
தேடிபொருகோடிவானம்பாடியாடுது
போற்றுதிருமாலழகர்க்கேற்றமானபண்ணைச்சேரிப்
புள்ளிப்பள்ளராடிப்பாடிதுள்ளிக்கொள்ளுமே, (௮௰)

இக்கரைக்காலிப்பொருனையக்கரைக்காலின்மழைக்கே
ஏமமென்னுஞ்சாமமென்று நாமல்லோபோவோம்
தக்கதோணியுத்துறையில் சிக்கெனக்கட்டும்படல்
தாழைகுடைக்கொங்காணியும் வேலைக்கேவேண்டும்
பக்கமேயூசிக்காம்பு சுளுக்குவாய்க்கிடுஞ்சிலை
பந்தமும்விளக்கெண்ணெயு முந்தவேதேடும்
முக்கூடலழகர்பண்ணை மிக்கசேரியிற்பள்ளர்
முழுதுங்குரவையிட்டே யேழுதினமாடீர் (௮௧)

### கலிப்பா.

சூலானதுமுகிற்றோன்றுதோ வேறுசெங்கண்
மாலானசூர்நாட்டில் மழையும்வந்தவண்ணமென்னே
வேலாவலயமுந்நீர்மேய்ந்து கருங்கொண்டமுகிற்
[…]லானதுன்றியதின் காலமுறைகாட்டியதே (௮௨)

### சிந்து,

[…]டதாளம்-கேதாரகௌளம்,

காவுக்கிறைவ[…]
கடலிற்பணித்து[…]னேவற்பணிகொண்டமுந்தார்
[…]ற்கோட்டி வடவிமுக்கூடலரியுமாய்ப்

பூவுக்குயர்ந்தகலைகள் மீன்றனுடமேவிக்கமலயத்தயனுமாலிப்
புனலைத்தரித்தவ்வரையிலேறிக்கனலைதரித்தச்சிவனுமாய்த்
தாவிப்பறந்துபணிகளைபதுங்கக் கோவிற்சிறந்தகருடனும்
காமேனயாகியுமருக்கழகு ஆனேயாகியுமிருமாய்க்
கோவிற்பெரியவடவேங்கடமாவிற்கறுக்குப்பொழிக்சயின்
குளிருகின்றதன்கோன்கழுத்தினில்வெளிருக்கின்றதுவானமே

வானக்குஞ்சுவள்ளல்வனைக் கோனப்பஞ்சுகொள்ளலால்
வழங்குமாறுதிரைப்பட்டே புனல்வழங்குமாறுபுறப்பட்டே
தானக்களிறுபடிந்திடக்குலை யேனக்களிறுமடிந்திட
உழையுநாரையுமுரந்தியும் பசுங்கிளியுநாரைசிந்தியும்
கானக்குழிகலையமேவமதுபானக்குழிவிலையவே
காட்டிச்சாதிவேரிற்போற குழமோட்டுச்சாதியூரிற்போய்ச்
சேனைபழிவியழகனூர் மதுகோனைப்பிறவிபழகுமுன்
தினைவனத்தையுதிர்க்குப்பாலமலைவனத்திலெதிர்த்ததே அசை

உதைத்தவிசை கொண்டெழுந்த கடவிலுதிரங் கிறியகியநிருதி யவனைக்குமபொதிகைவலைக் முற்றுப்போம்படிமுற்றுப் போய்பதைத்துநெளியன்றுதிக்கைமூக்கன்பண்ணைக்கும்படிம்பாசிமீன்-வதைக்கு மகரங்குதிக்குஞ்சென்னிமநதியுல்லம் பொத்திமீன்மடங்கைகடங்கை சம்பாநெரிக்கிமசலிபஞ்சலைகருங்கண்ணி புதைத்துமணலையொதுக்கிக்கடலைப்பொருணம்மழகர்கருணைபோல் பொருளியாறுபெருகிவருகிறபுதுமைபாரும்பள்ளியரே

குற்றாலந்திரி கூடல் மால்வரையுற்றேமேக பொழிந்தநீர் கூடிப் பொருனைநாடித்திருமுக்கூடற்பதியைவலங்கொண்டே வற்றுமடுவிற் றுள்வத்குரவை வாளைகோலை தேளிமீன்பற்றுவயினாகெண்டைகெழுபருவலாறுமணலிலேபாய்க்காலிற்பாயக்குளத்திற்பாயவ்வயலிற்பாய்ந்ததே, சிற்றுரென்பேர் பெற்றுலுமொரு சிறியவர்மனப்பெருமைபோல் சித்தி,நன்னதிபெருகிவாற புதுமைபாரும்பள்ளியரே (௬,௬)

தோணிச்சிந்து-கலிப்பா.

திக்கிலுள்ளோர்தாம்புகழுந் தென்கூடல்மாநகரி
உத்திரமாய்மாலழகருகந்திருக்கும் பண்ணைதனில்
மிக்கவயல்வேலைசெய்யவேணுமடா அக்கரைக்குத்
தக்கழூடன்போகவினிச் சடுதியிலேதோணிவிடாய்

ஏலேலோ

காராளேதுயர்தீர்த்த அடண்ணே கருணைபுரிமாலழ
தாரணிமுக்கூடலிலே அடண்ணே தழைத்தோ பள்ளியரில்
பாமுலைபாளியைய பள்ளிதனைக்காணாமல்
மாரன்மையல்பெருகுதடா வங்கணம்ரா க்குந்தோணிவிடாய்

பார்கொண்டமுக்கூடழகர் பதிதன்னிலே
பஞ்சடிச்சிற்றிடை கொஞ்சுவாய்க்கனியிதழ்
வார்கொண்டகும்பமுலைப் பள்ளிதனைக்காணாமல்
வங்கணமேதோணிநீரிங்கிதடத்துவாய் (ஏலேலோ) (௮௭)

எத்திசையும்புகழ்ந்தேத்தும் இறைவன்திருமாலழகர்
பத்தியுடன்வாழ்ந்திலங்கும் பாங்கானமுக்கூடலிலே
குத்துமுலையாளிளைய கொம்பனையைக்காணாமல்
மெத்தமையல்பெருகுதடா அக்கரைக்குத்தோணிவிடாய்

சுந்தரப்பிரபைமதி செந்தூரத்திலமுந்
தோயுமிடைமகளை மேலாபரணமாடவே
வந்துமீறுமோகம் பள்ளிதனைக்காணாமல்
வங்கணமேதோணிநீ ரிங்கிடத்துவீர் (ஏலேலோ) (௮௮)

இளையபள்ளிசொல்-கலிப்பா

முன்றிற்குடவளையூர் முக்கூடலூர்செய்த
நன்றி[illegible]க்கிலக்காள். மையானேனே நான
வென்றித்திருநாமம் வேறோர்பொருளைநதி
அன்றிற்குலங்காள்வற் குறுதிசொல்வீரே. (

தரு

தெள்ளியசீரணிற்றுயிலுந்திருவழகர் தன்னாட்டில்-நள்ளுவமலர்குடி-யெனைத்தான்-கையிலணைத்தாசைதரும்- பள்ளனை நான்காணாமல் எனது பந்துமுலையிரண்டும்விம்முதடி பள்ளவன்வரவேணுமடி-சகியே வஞ்சியரேபள்ளனையழைத்துவாடி. (௯௰)

திருவளருமருதூரில் சிவனார் சிறந்திருக்குநன்னாட்டில்-வரிசைமிகும்வடிவழகர் குடும்பன் வந்தெனைக்கண்டாசைதந்துபரிசமவைத்துவுறமுறைமுன்பவாறியப்பள்ளன்றான் மாலையிட்டான்புருஷன்வரவேணுமடியடியோ பெண்மயிலே பள்ளனையழைத்துவாடி

முடுகு

காமன்கருப்புவிற்பாணமதுபாயுதே கங்குலானைகூவத்திங்களுங்காயுதேமாமரச்சோலைகுயில்வந்துகூவுதேவங்கணரில்லாமலே-மாமோகமீறுதே (ஏலேலோ) (௯௧)

மகம்பெரியபேச்சிமன்னை வகைத்ததிருகாலழகர் மதம்போற்றி வாழுமெங்தன்பள்ளனைநான்காணுமல் நிதமபமிகத்தடிக்குதடிசகியே நிச்சயமாய் விரைந்துசென்று கதம்பமதுதானமணக்கும் காரிகையே பள்ளனையழைத்துவாடி பண்ணைதனில்நான்றறியேன் எனதுபள்ளனைக்காணுமல் உண்ணமனஞ்சகிக்குதில்லைவுநதுசடிபென்மனதுமண்ணமுறுமிருள்வனத்திலிணைபிரிந்தமானதுபோல் கண்ணுறக்கம்வருவதில்லை சகியே காரிகையேபள்ளனையழைத்துவாடி.

முடுகு

மருவுலவமானும்புலிபோலேபாயுதேமயலானதுபெருகிமலரணையுகணையுதே இரவுபகலறியாதசிறுபருவமல்லவோ எதுக்குமன்மதன் வாதுக்கழைக்கிருன் (ஏலேலோ) (௯௩)

கலிப்பா.

பள்ளனுக்கெதற்பைமீதிற்பரிவுடன்வந்தபோது
கள்ளமாயிளையபள்ளி காமத்தாலடக்கிக்கொண்டான்
விள்ளிடாவகைதானென்னவிறல்மிகுபண்ணைக்காரன்
பள்ளெனக்கணவனெங்கேபுகலெனப்புகலுவாளே. (௯௩)

சிந்து

ஆதி-காம்போதி.

குடிவிற்கிடங்கபள்ளனைமுக்கூடற்பள்ளி கூப்பிட்டெழுப்பிமுந்தனுள் விடியப்போமவேலையிலென்றுளவனும்போனுன்வெள்ளமுமேல் வரத்தாச்சுசடிசம்பிரவத்தியேதோ திரும்பிவரக்கண்டிலேனின்று மூன்றுநாள் அடிமைக்குகேற்றிரவெல்லாமுறக்கமில்லையழகா-ரிவர்காணுணடே (௯௪)

முப்பழஞ்சோறுமுண்ணவேகடத்திக்கொண்டு-ரிப்படியவனும் போய்ப்பட்டான் அப்பாலவனுக் கொன்றுனுலுயிர்க்குச்சதமாமேயடியாளுக்கென்னகொப்பால் கலிங்கமருகாமினையாமென்று சொன்னுர்களேதென்றறியேன் இப்பாலழகர்செய்ததைக் காணலாமென்றே யிருக்கிறேனென்செய்குவணுண்டே (௯௫)

மூத்தபள்ளிசொல்,

அச்சுதன்றனைவலிநலேபண்ணைபாள்வந்தநபிளுசேகேளுங்கச்
சதுபுனைந்தஸ்தனத்தாள் அந்தககள்ளி மருதுரிதுளையாள்மேற்
பக்ஷமதுவைத்தபிறகுகொடும்பாவிபள்ளன்செய்ததிஷ்டூரம்
நிச்சயமாய்ச்சொல்வனும்மாடேய்யனைதநிசமென்றறியுமென்னுண்டே

திக்கபுகழ்சேரிமுக்கூடற்பள்ளனெனைத்
தாலிகட்டிக்கொண்டநாண்முதலாய்
ஒக்கவேயென்புத்தியுங்கேளான்
பள்ளனும்போயோராறுகாதாச்சே
யிக்கமருதூரானகைமருந்தாலெக்தனிட
விட்டுநானுறக்கமுமில்லையிளைய
சக்களத்திகுடிசிலிருப்பானோராணுவிட்டுத்
தான்பார்க்கவேணுமென்றாண்டே. (௧௭)

இளையபள்ளிசொல்

எத்திசையும்புகழ்த்தியங்கேள் பண்ணையாண்டேபள்ள
னெங்கெங்கேபோனானோவெனக்குங்காணேன்காணாண்டே
வெற்றிமிகுந்திருமுக்கூடல்வாழ் பண்ணையாண்டேயந்த
வீணனிவனைக்காணவெங்கும் பண்ணையாண்டே. (௧௮)

சானைதனில்வைத்தேன்பள்ளனைக்கூப்பிட்டாளாண்டே-மூத்த-சக்களத்திகளின்பிசூணங்கேளுங்காணாண்டே,காலைவருவானெனச்சொலவிப்போனான்காணாண்டே, ஆற்றில்சன்றாய்ப்பெருவெள்ளமின்றுராவந்துதென்னாண்டே. கொஞ்சமாய்க்கஞ்சிகுடித்தானவன் பண்ணையாண்டே-பள்ளன்-கொள்ளாலேயா அவன் கள்ளுஞ்சுள்ளும்பண்ணையாண்டே, வஞ்சமெனப்பள்ளிகஞ்சமென்றெண்ணியென்னாண்டே,ஏக்கமாய்நேற்றிராத்தூக்கமெனக்கில்லையாணாண்டே,பள்ளனெங்கெங்கேபோனானோவெனக்குங்காணலே காணங்காணாண்டேதேய்க்குமெய்ஞ்ஞானஅருளர்முக்கூடலிலாண்டே,சென்றுசீக்கிரம்பள்ளனைப்பார்க்கச்சொல்லும்பண்ணையாண்டே. (௧௯

கலிப்பா,

சேர்த்ததிருமுக்கூடற் செல்வர்பண்ணையாண்டவர்முன்
வாய்த்தமருதூரிளையாள் வந்துசெப்பிபோனதற்பின்
போய்த்தமொழிசொன்னதுக்குப் பொறுக்காமலேயினூர்
மூத்தபள்ளியையழைத்து மூற்றுமவர்கேட்பாரே.

பண்ணைசொல்.

சீதான்பண்ணையிற் சேதியெல்லாஞ்சொலமூத்தபள்ளி-சிந்தைமகிழ்ந்துபள்ளன்சொத்தக்குடிகே-கூடிதன்னுடனேயிளையாள்வாதுசொன்னதாக-டவன்சொல்லுவார்த்தை வாட்டுன்பல்லைப்பிடுங்க இப்போதுபள்ளனிருக்கின்றபேதமெல்லாந்தெளிசொல்லெனப்-போதுஞ்சொந்தக்குடியினைப்பவள்ளலே-பாதிமதியைத்தரித்தபரமன்மைத்துனன்பண்ணைபள்ளன்அக்கரைக்குப்போனான்பக்குவஞ்சொல்லாய். (௨௰)

## மூத்தபள்ளி சொல்,

சாளனைபபள்ளனைவைத்துச்சத்தியமும் மோடேசொன்னசக்தள த்திமருதூரான்வெட்கங்கெட்டவள்- நாளையறிந்துசேதியும்நான்சொல் லும்பொய்யிதல்லாம் நான்கூப்பிட்டாளென்றுதேவர்தன்னிட்டுச்சொ ன்னான் - ஆளையறியாமலேமதசாரமும்மோடேசொன்னாளாக்கினைசெய் சவுக்காலடித்துவிடுமோ-வேளைக்குப்பள்ளன்வருவான்மேலும்பண்ணை யடியாள்நான்மெத்தச்சொல்லத்தெரியாதுன்சித்தங்காணுண்டே. ()

அச்சுதன்பண்ணைக்குப்பள்ளன்வந்தநாள் முதலாயென்னை ஆட்ட பாட்டங்கொண்டழையாளன்புலைத்தாளே- பக்ஷமிருந்துபள்ளனைக் குச்சுக்குள்வைத்திருக்கிறாள் பண்டாரஞ்சென்றுபள்ளனைப்பார்த்துவ ரட்டுமே-அச்சமில்லையவள்கள்ளி பக்ஷமெல்லாந்தான்றெரியும் - அப்போ தையுமனக்களங்கமிப்பத்திருமேகுச்சில்வைச்சிருப்பதெல்லாமந்தப்ப ள்ளிமனக்கள்ளமெல்லாம்வாசவரக்கண்டறியும்வண்மையென்றுண்டே.

### கலிப்பா.

இசைபோனகுருகற்றத் தென்மருதூர்பள்ளிகள்ளி
வசையாதபள்ளனையுள்ளாக்கிவைத்துக் கொண்டேனுடன்
பிசையாதவார்த்தை வசையென்றுபண்ணையானமூத்து
கசையாலடிப்பபின்னறு கண்சிவந்துகூறினனே. (௩௪)

## பண்ணைசொல்.

வெள்ளமதிற்றுயில்மாயன்வெள்ளாண்மையதெல்லாம்-இப்ப-வே லைசெய்யத்தக்காலமுமாச்சுதேயல்லோ-பள்ளக்குலத்திற்பிறந்தவான வர்க்கெல்லா மூப்புளைதந்துமல்லதுமற்றொருவர்க்கிதுமில்லை தள்ளித்த ள்ளிளன்னைத்தள்ளிடக்கிறாய்பள்ளியுந்தன் தந்திரமெல்லாம்நான்மூந்த காட்கண்டனடிகள்ளி பள்ளனைக்கள்ளத்தொழிற் செய்துவுள்ளாக்கிக் கொண்டு-படித்தபாசாங்குவித்தைபகட்டாதேஎன் னுடன்கள்ளி,குச்சி லிற்பள்ளனையச்சமில்லாமலேவைத்துக்-கோசிகமாயங்களாறுடன்செ ல்லுகிறாய்கள்ளி-கீச்சமூன் வீட்டிற்பள்ளனிருக்கிறான் பள்ளிசென்று கேடோஞ்செய்யாதேபொட்டனக்கூட்டிவாகள்ளி- மச்சினியுள்ளாக்கிய ச்சுமில்லாமலேவைத்தவுந்தன் மாமலப்பள்ளனைவருத்திக்கொண்டோ டிவாகள்ளி-தெச்செகத்தாருன்னைமெச்சிக் கொள்வாரடிபள்ளிநீதான்- இனிஎன்றும்போகாதேவாவென்றுஞ்சொல்லாதேபள்ளி பாற்கட்டிற்றன் னிலேபள்ளிகொண்டுமெங்கள்மாயன்- அவனைப்-பணிந்துஅருணைத்துக் குப்பாக்கியந்தருள்நேயன் குற்கருமேனியன்தொன்மறைபோற்றியநா யன்-இந்தத்-தொழிலறிந்தாலுன்னைத் தாத்திவிடுவேனடிகள்ளி, ()

## சிந்து.

### ஆதி- மத்தியமாவதி.

மூக்கூடற்பள்ளியைப்போல் சுளுக்காயேல்லவோ
வக்கணையேன்மருதூர் அக்கிரமப்பள்ளி
குச்சுக்குள்ளேபள்ளனைவைச்சுக்கொண்டதடாதேவாரைத்
தைச்சுப்போடுவேன்மருதூர்தச்சாப்பள்ளி
கடினமுனைப்பவைகேட்டு வடிவழகக்குடும்பன்
குடியினிருந்தவனை கொடியில்வந்தான்
பள்ளனைப்பண்ணைக்கான் கள்ளமாய்ப்பார்த்துப்பள்ளா
துள்ளாமற்பண்ணைச் செய்திவிள்ளடாவென்றான (௯௫)

## பள்ளன் சொல்,

அழகர்பண்ணையாண்டே மனதுமையல்கொண்டேன்
களவுசொன்னாளென்று மனதில்வையாதேயாண்டே
பழையபகையானகொடும் பாவியவள்மூத்தாள்
வினைவுமெத்தச்சொல்வாள் மனதில்வையாதாண்டே. (௯௬)

சிறுத்தவிடைமூத்தாள் வெறுத்தமூரிவாக்காவ
கறுத்துமிகச்சொல்வாள்குற்றம் பொறுத்தருளுமாண்டே
கறுத்ததிருமேனி வெறுத்தபுகழ்நாதன்
பறுத்தபண்ணையாண்டேகுற்றம் பொறுத்தருளுமாண்டே, (௯௭)

மாறுகொண்டமூத்தாள்வந்தே யுங்கள்பக்கல்
தூறுமெத்தச்சொலவாளதைக் காதுவையாதாண்டே
ஏறுமயில்வாகனர்க்கு ஏற்றதிருமாமன்
கூறுமறைபுகழழகர் கொற்றபண்ணையாண்டே. (௯௮)

மங்கையவள்மூத்த மனதுகபடத்தால்
சங்கைமெத்தச்சொலவாள்குற்றஞ் சகித்தருளுமாண்டே
சங்குகாத்தீதந்திவந்தசகடனைக்கொன்ற
எங்கள்திருவழகர்க்கேற்ற பண்ணையாண்டே. (௯௯)

கூறுகொண்டமூத்தாள் ஏதுமெத்தச்சொல்வாள்
காதில்வைக்கவேண்டாமமா தர்மெச்சுமாண்டே
போதுமலர்தனிலே மீதிலுறைமாது
காதலர்தம்பண்ணைக்கேவல்செய்வேனாண்டே. (௧௦௦)

## ஏசல்-கலிப்பா,

சோணியின் வந்தபள்ளன் சூதறிந்தமருதூராள
நாணமில்ல முச்சக்களத்தி நமேனையிலேயுடக்கி

வீணிலேதானொருத்தி வீண்பழிக்குள்ளானனென்று
தாணையாய்மூத்தபள்ளி கடுகடுத்துச்சொல்வாளே. (௧௧௨)

மூச்சினிற்பள்ளை வைததுக்கொண்டு
கொடும்பழிகளையென்மேலுண்டாக்கி
நச்சரவணைத்துயிலுமழகர்தன்
நாட்டிற்பண்ணைவிசாரிப்பானறன்னுடன்
பக்ஷமில்லாதவார்த்தைகள்பேச
கேட்டிருலெனக்கென்னபயமோ
அச்சமில்லாமற்பேசினதுசுகன்
னங்கள்க்கவுதைப்பண்டிபள்ளி. (௧௧௩)

உதைத்துப்பாரடி அழகற்கடுமை
சோமலென்னைப் பேசாதேபோடி
மதித்துச்சொல்லாதவார்த்தைகள்சொன்னலுன்
மார்பொடியவுதைப்பணடிபள்ளி
சதித்துப்பள்ளனையென்னையுமோட்டித்
தனங்கள்கையிலிருக்குமதமோ
அதட்டிப்பேசுறகாரியமுண்டானால்
அறிந்துசொல்லடி மூக்கூடற்பள்ளி. (௧௧௪)

அறிந்துசொல்லென்றுசொன்னமருதூ
ராமக்களையடக்குமதமோ
மருந்திட்டுப்பள்ளனைக்கைப்பணமெல்லாம்
வாங்கிக்கொண்டும் ஆசாரம்பேசுகிறாய்
திருந்தப்பேசுறாயப்பண்ணையிலுருன்
சேதியெல்லாமறிவான்டிபோடி
இகழ்ந்துப்பேசுற மருதூருப்பள்ளியை
மிடிப்பொடியவுதைப்பண்டிபள்ளி. (௧௧௫)

அடித்துப்பார்த்தாலல்லவோதெரியும்
அடித்தகைபல்லுதிரவடிப்பேன்
கடித்துப்பேசுறாய் காமகாரம்வைத்து
கட்டுமெட்டும்கட்டுமறிவேன்
விதைத்துப்பேசுறாய்கொண்டவனைவிட்டு
வேசிமார்க்கடைப்புமிருப்புக்
தொடுத்துப்பேசுறமூக்கூடற்பள்ளிநீ
சொல்லும்வார்த்தையைச்சொல்லடிபோடி, (௧௧௬)

சொல்லடியென்றுரைத்ததுக்குத்திரு
செகல்லு ... தட்டுக்குமிருசின்

பல்லோடிரு நமீனைப்பூனைப்போலே
பாரிக்குருளிக்குப்பாரிலெனக்கொரு
புல்லடி நீயெனக்குச்சமனோ
ஆக்கச்சிவாய்புலம்பாதேபோடி
அல்லடி மருதூர்பள்ளியுன்றனாலே
யானமட்டெனீபாடிபோடி (௧௧௭

போடியென்றநீபேச்சைப்பாம்பாட்டோய்
புதியமுக்கன் பூட்டகமெல்லாந்
தேடிநான்சொல்லவேண்டியதில்லை
செகத்திலுள்ளோர்தமக்குத்தெரியும்
ஆடிக்காற்றுத்துரும்பதுபோலே
அகற்றுவேனீயெனக்கெதிராமோ
பாடிநெல்வின்பதனைத்துய்த்தாலரி
பாரிலாமோமுக்கூடலிற்பள்ளி (௧௧௮)

காரைவேர்கருநொச்சிகற்றாழை
கழுஞ்சிவேர்தும்பை காஞ்சிரம்வேருங்
கோரமூலமுங் கொன்றைப்பிசினுங்
கொக்கன்மூளைகருங்காக்கையீரல்
சோரவேநீரைத் தூக்கியரைத்துத்
தேனிலேயதைப்போட்டுக்கலந்து
மாரவேளானழகக்குடுப்பனை
வடையிலேமருந்திட்டாயோகள்ளி, (௧௧௯)

வேறு,

மல்லிகைவேர்முல்லிகைவேர் மாதலைவேருஞ்சிறிக்கி
மத்தனத்துச்சூரியமுள்ளு நின்றுசிணுங்கி
கல்விநாறும்பல்லிவாலுங் கருநாய்பல்லுங்
காக்கைக்கண்ணுங்கூகைகிணங் கரும்பூனைப்பிச்சம்
எல்லாத்தையுமொன்றாகவே கூட்டியரைத்து
இதமானபாலுவார்த் துண்டையுருட்டி
வல்லமையாச்சேருமுங்கள் பண்ணடிக்குப்பச்சை
மாவிலேமருந்தையிட்டு மயக்கினாட்போடி (௧௨௰

தொண்டைவண்டிசிறிக்கி சோதக்காரியுங்கள்
தொழிலுவித்தைகளிங்கே சொல்லாதேபோடி
சண்டிகெட்ட முண்டனுக்குச் சாட்சியைச்சொல்லிச்
சக்களத்திசாதிநதொழிற்காட்டாதேபோடி

சக்களத்தியென்றுசொன்னாய் தவிடுதிருடியுன்னைத்
    தண்ணிக்கயிற்றாற்கட்டியடித்தது சாதியறியாதோ
செக்கரித்துச்சண்டைபிடிக்கிறாய் நீவிசிட்டேரி
    நேர்மையாய்ச்சிரகச்சம்பாநெல்லைத்திருடி
தாக்கமிட்டுச்சண்டைபிடிக்கிறாய் சண்டாளிமூளி
    சங்கிலிக்குடும்பனோடே சேர்ந்திருக்கிலையோ
சொக்கரித்துச்சண்டைபிடிக்கிறாய் கோழிதிருடியுன்னைக்
    கூப்பிட்டுவேகட்டியடித்தது குலமறியாதோ (௧௨௨)

வாக்குப்பெரிதாகவின்றுவண்மைபேசாதே உங்கள்
    வங்கிஷத்தாக்கினம்வருமருதூருப்பள்ளி
நாக்குமூக்குமுன்னேவைத்துநடுவேவில்லாதே
    கண்ணுமூத்தபள்ளியென்றுபேசாதேபோடி. (௧௨௩)

செம்பொன்சித்தாக்குஞ்செய்து கொடுமென்றுசொல்லித்
    தென்னந்தோப்புக்குள்ளே சேர்ந்திருக்கிலையோ
கொம்பன்குத்தாதும் ஊணுடியுமாகக்
    குண்டுபணிப்பட்டிக்குள்ளே கூடியிருக்கிலையோ
மஞ்சளையுங்கைகளையும் வாங்கிக்கொண்டசேதியெல்லா
    மாமியைக்கேட்டாற்றெரியுமே மருதூருப்பள்ளி
அஞ்சுவிரல்மோதிரமும் வாங்கிக்கொண்டசேதியெல்லா
    ஆத்தையைக்கேட்டாற்றெரியுமே மூக்கூடற்பள்ளி
கத்திக்காரைக்கட்டுவமுதுஞ்செய்துகொடுக்கக்
    கடையபள்ளனைக் கள்ளிக்கிடையிலேகட்டிக்கிடக்கிலையோ

உறவியாமகலிப்பா,

மூக்கூடற்பள்ளனையு மூன்றுநாள்காணமல்
இக்கரையோ அக்கரையோவென்று பண்ணையான்சினத்து
தர்க்கமிடக்குற்றமென்று தனமனதிலேநினைந்து
உக்கிரமாயவர்தபள்ளன் உறவிபாஞ்சொல்வானே. ௧௨௫

வேறு.

மாரிச்சியஙிடயேரித்தண்ணீர்போய்வாய்க்குண்ணூறு
    வாசகஞ்சிறுமழகர் பெருநாக்கேசவன்றிருத்தாங்
காசிப்பபிரிட்டுரிக்கதியமாங்கதலிவாழை
    கத்தவாயலுங்கிர்த்திசேனையுங்காற்றலராதிருத்துஞ்

சார்க்கலுத்துமீரத்தூரெல்லாய்காற்றுபாவு
சன்னல்வெட்டிடவாய்க்கால்பேர்க்கும்வன்னியடித்திட்டும்
வீரப்பாண்டியனேரிப்பாச்சலும்நாச்சியார்திரு
விளையாட்டுச்சுமைதாங்கி வட்டமுங்களரிப்பந்தடியுங்
கோரக்குள்ளிடையோரத்திற் பாவும்பாவையான
குத்துக்கல்லுங்குளத்துப்பத்தமுத்தம்பருத்தியு
பாரத்தென்மருதூரிற் பண்ணைக்கேயழகர்நாச்சி
படைக்குத்தெற்குவடக்குக்குளங்கள்மடைக்குள்பத்துஞ்
சேரச்சேவையார்பெருநாடுள்ளதெல்லாம்எருவைத்தேனின்று
திருப்பிணேனின்று
தேவரீர்பாதம்விருப்பினேனாண்டே (௧௨௭)

வயல்விபரங்-கலிப்பா

எந்தைதிருமுக்கூடலேரிரோடிவைத்துத்
தந்தவிதமோமனூராசங்கரத்திவிட்டோகாஞ்-
சிந்தைதொட்டப்பாசெனக்கண்சிறுபண்ணையானெழுந்து
வந்தபள்ளன்றன்னுடனே வயல்விபரங்கேட்பானே.

சிந்து,

அடதாள-மோகம்.

பழகியநோதியிரென்சமத்துப்பயிரிடாக்கள்ளப்பள்ளனல்லாவேவாஉழவுதாநென்றுருபண்டியுளுந்தனை யொன்றல்லாமனட்டேனின்றெனக்கில்லே, அழகரேவனுவேயிலங்கையழித்து மீளுங்குராங்குள்ளபட்டுவ கிழமைதோறுங்கதிர் முளைத்தாலும்கிடைத்ததே யொட்டுமோ பண்ணையாண்டே. ௧௨௮

பலவெள்ளாணைமைபிட்டேன் முணவாரிவையும்பண்டோரன் பெருமாள கட்டளித்தார், சிலவுபோனதும்போய் சிலபூமபாளை சென்றிலக்காரர் தோப்புக்கேகாணும், கலகவேட்கைத் திருமங்கையாழ்வாளைக் கவ்வனிமைத்துழுதித்தானேக்காட்ட, சொல்லொணு தேவதாசியின் முந்துஞ்சொரிகுரும்பைவிற்றும்பலாண்டே ௧௨௯

எங்கும்போற்றும்பெருவெள்ளமுக்கீர்சமர் சேனைகொண்டாலேதாக்கு, தங்குப்பேனாக்குலவாழைநாய்த்தச்சற்றுமோசெல்லரிசியாளாறு, பொங்கும்பூரில்மறுவில்லி லைப்புயல்லில் ஊன்றிப் புறஞ்சாறுந், துண்டோ, தங்குமிங்கக்கொண்டாடுவதெல்லாமறிவிலாடமையினைக்கனண்டே, ௧௩௦

அதிசயந்தனைக் கேட்கில் மூக்கூடலழகர்பண்ணைக்குழவுமாடெங் கே,விதிவசந்தனிலாயிரம்வசிய மேற்றிறைமுகஞ்சேர்த்துகாணேசதி யிலேவெப்பறையிலேயாட்டைக்-கட்டடையாளந்தான் பார்க்கவேணு ம்,எதிரிலாதமயிலேயஞ்செட்டிகொண்டேகினுன்பெட்டையென்னூர்கா ணுணமே.

ஒற்றைக்கொம்பன் தாண்டவராயனை உள்ளுநக்கோவிற்குள்ளே வைத்தேன், மற்றைக்காளைகளெல்லாம் நயினார்வடமலைப்பர்பேரிட்டு நீக்கம்,பற்றைக்காற்றுக்கிடக்குமொரு செம்பருந்துசாயச்சுவைக்குத் தளப்பன், புறவைக்காற்றிடும்பாம்புகடித்திடும்போதுவிண்ணிற்பறக்கு ங்காணமே (௧௬௨)

திருமூக்கூடலழகர்க்கிளையதெரிவைநீலியைத்தேவியாய்க்கொண் ட,மருதப்பார்தொழுநானுமாணிக்கவாசகன்கிட்டவாங்கியேகொண் டான்,விருதுக்கேகாணக்காட்டார்வழக்கிட்டுமேழிசோழன்வேண்டி க்கொண்டார்கள் கருதிப்பெண்ணுக்குமானுக்குஞ்சேரக் கலப்பைமுற் றுஞ்செலவிட்டாகாணமே.

கூடிலவணைக்கின்னமெழுதிய ராஜவாணைபொரணடு பங்கிட்டே, நாடியகாவையம்பலவாணனயினார் பேசிற்பின்பாதியுங்கூடும் தேடுசொல்வர்முன்னின்றபாதியுஞ்சேர்த்துக் கொள்வர்மகாராஜாதாமே கூடிமுற்கூடுமவள்வித்தையெல்லாங் குழுங்கைமாரனைக்கேளுங்களா ணமே. ௧௬௪

அனகனோ வருநயினுத்தேபழகர்மண்டபத்தூணைசாமெத்தக்கன கநீள்வடக்கேகோடி கொடுத்தேன்கார்லணைக்குமுழுவட மென்றே என சொல்லிவன்கடுமணைனின்னைசானுக்கிறந்தொன்றநகத்தடிதன்னைத் தீனகரன்பகற்காணேனிராத்திரிதேடியேபுறம் படுக்குங்காணுணமே,

ஆசைவார்த்தை-கலிப்பா.

மெள்ளவேமாட்டுவகை யெழியோர்கால்முதலாய்க்
கள்ளமில்லாநெல்வகையுங் கழுநின்றேமதிற
[illegible]ள்ளவக்கழூத்தரின்றி கூசாமல்வந்துநின்று
ப[illegible]ணிட்டுன்னசென்று கருவாளரசகொண்டே, ௧௬௫

வேறு.

மாரனும்ரதியும்போல்மருவிச்சருவிச்சருவிச்
சீருடனிருவருஞ்சேருங்கணவா
சேர்வும்வேண்டாமுன்சினேகிதமும்வேண்டாம்
ஊரகத்தில்லாமலோடிப்போபள்ளி
ஓடிப்போவென்றென்னையுருக்காதேநறுமலர்
சூடியேயென்னுடன்சுகிக்கவாகணவா
சுகித்திடஇளையவள்சொந்தக்காரியுண்டு
மகத்துவம்பேசாதேமாமாலைப்பள்ளி
மாயாலப்பள்ளியைமருவாமலனுதினந்
தாமதஞ்செய்யாமற்றழுவவாகணவா
தழுவவும்நான்கொண்டதாரமெனக்குண்டு
அழுக்காமலேநின்றுஅப்பாலேபோடி
அப்பாலேபோவென்றுஅதட்டாதேபென்னிரு
செப்பாருமுலைமீதிற்சேரவாகணவா
சேரவுநான்கொண்டதேவியாள்தன்னுடன்
கூடியேயனுதினங்கொஞ்சுவேன்பள்ளி
கொஞ்சியஞ்சுகமாகப்பஞ்சரித்துறவாடிப்
பஞ்சணைதன்னிலேபடுக்கவாகணவா
படுக்காமற்போவனோபள்ளிபிளையாள்கிட்டத
துடுக்கென்றுஞ்சொல்லாதேதோதகப்பள்ளி
தோதகப்பள்ளியைச்சுகியாமலனுதினங்
காதலாயென்னுடன்கலாவாகணவா
கலருந்தென்மருதூரக்காளியாபள்ளிக்கு
நலமாகத்தொண்டியாய்நடவாடிபள்ளி
நடக்குமுன்காலிலேநாளைக்குட்டைபோட
அடக்கும்பண்ணையினார்க்குஅறிவிப்பன்பள்ளா
அறிவித்தாலகர்தன்னருளினாற்குட்டையைத்
தறிப்பித்துப்போடுவேன்சதிகாரப்பள்ளி. ௱௩௭

சாடிக்கலிப்பா.

விந்தைமிகும்பள்ளனுடன்விரகமென்றவாசையினால்
எந்தவிதஞ்சொல்லியுதானிணங்காதவாறுகண்டு
அந்தமிகுமழகர்பண்ணையாண்டவரோகேளுமென்று
தந்திரமாய்மூத்தபள்ளிசாடிமெத்தச்சொல்வாளே. ௱௩௮

## சிந்து.

தூக்கிணிப்பள்ளன்வய்க்கிறவூட்டத்தைத்
துக்சணிச்சொல்வேன்முக்காலுஞ்சேருங்
கார்க்குங்கல்லணைபார்க்கவுஞ்செய்யான்
(காலஞ்செய்வதுகோலஞ்செய்யுமோ)
போக்குநீக்கில்லைமூக்கின்மேற்கோபமேன்
புத்தியுங்கேளான்சத்துருசீலன்
வாக்குவாதமுண்டாக்கினனென்றென்னை
வைதானுமவையுமெய்தான்காணாண்டே. ௱௩௯

கட்டினமாட்டைத்தொட்டவிழாதொருக்
காலுந்தானுளக்கோலுங்கைதீண்டான்
தொட்டியேற்காளைமட்டிபோல்வந்தவன்
சோறிட்டாலுங்கண்ணேறிட்டுப்பாரான்
வட்டில்வாய்வைக்கில்சட்டிகொண்டோங்கும்
மருதூராளைவிருதுக்குவைத்தான்
பெட்டியால்வாரிப்பட்டடைநெல்லெல்லாம்
பேயத்தண்ணீருக்குத்தேய்த்தான்காணாண்டே. ௱௪௰

பொங்கமாய்வளர்கொங்கப்பசுவினைப்
போதிக்கொன்றவனேற்றுக்கொடுத்தான்
சங்கிலிமாடன்பூசைக்கென்றுமவன்
றன்னைவாழ்த்திவரும்புலவோர்க்கும்
நங்கைமார்கள்தன்கோவிலைக்கென்றும்
நாத்திமார்கள்தன்கோயிலைக்கென்றுஞ்
சங்கையில்லாமலேசெலவிட்டநெல்
தான்கணக்குக்கடங்காதென்னாண்டே. ௱௪௧

அன்னச்சம்பாவில்மூன்றுகோட்டைநெல்
அத்தைமாமகள்பேத்திக்களந்தான்
இந்நிலத்திலிளையவள்பொன்பணிக்
கின்பமாகபொன்னைப்பதையீந்தான்
மன்னுமாமணிக்கன்னலைவெட்டி
மல்லப்பன்கையில்வெல்லத்துக்கீந்தான்
இன்னமுமிவன்செய்தகளவெல்லா
மேத்துவேன்குட்டைசேத்துங்காணாண்டே. ௱௪௨

செந்நெற்பதத்தைத்திருப்பியும்பாரான்
சிந்ததென்னையந்தோப்பையும்பாரான்

கன்னல்மாதளையிஞ்சிதமுதேருக்
 காவல்வைத்தூக்கருததாகப்பாரான்
எண்ணுமாதவன்பூசைக்குப்புஷ்ப
 மெடுக்குப்நந்தவனத்தையும்பாரான்
அண்ணுமின்னுமென்பள்ளன்செய்குற்றம்
 அடியாள்சொல்லஅறிந்துகொள்வீரே. ௱௪௩

கட்டுங்கல்லணைவெட்டித்திரியான்
 களப்பையூணவுழப்பையும்பாரான்
தட்டுங்கொட்டுங்கொழுமுனைவைபா–னன்
 தான்சொன்னதுஞ்சடுத்தமேசெய்வன்
கெட்டிவைத்திடுங்கொட்டைநெல்லெல்லாஞ்
 செர்பித்தெவித்துததென்பாய்முடிந்தான்
அட்டிசெய்யாமல்பள்ளன்செய்குற்றம்
 அடியாள்சொல்லஅறிந்துகொள்வீரே. ௱௪௪

கலிப்பா.

இடையரைக்கண்டே வாவிலேவிபிளையாள்குடிவிற்
கிடையதனுக்சேகல்லகிடையெனச்சென்றான்குடும்பன்
அடைவுபட்டசெய்திபணையைபாண்டவனார்க்கேளுமென்றே
படைதொடுத்தமூக்கூடற்பள்ளிமுறையிட்டாளே. ௱௪௫

அடுத்திடவிட்டாள்சொல்லிக்கெடுத்துவிட்டாள்கிடைதான்
 ஆட்டிற்கிடைபோவிளையாள்விட்டிற்கிடையோ
படுத்திடும்பள்ளன்வேலையைக்கெடுத்திடுங்கள்ளனைக்கண்டு
 பதறியெழுந்நாங்கைகாலுதறியெழுந்தான்
எடுத்திடுமுடன்மயல்போய்த்தொடுத்திடுஞ்சடங்கனவுகள்
 இன்னமறியிரடியாள்சொன்னதுங்குறியிர்
தடுத்தணைத்தாளாமுகர்அடுத்தெனைக்கேளார்சிறைச்
 சாலையிற்போட்டால்வளைவான்வேலையினுண்டே. ௱௪௬

வாத்தினைமீறுஞ்சிலவுக்குக்கரித்திரமேறும்போய்க்கொடை
 மட்டுங்கட்டில்லான்கூத்துக்குங்கொட்டுக்குநல்லான்
ஊத்திடுங்காலைச்சோழியனைத்தலைமேழைப்புதியன்
 ஊட்டுக்குங்குறித்தான்இல்லம்பாட்டுக்கும்பொறித்தான்
பாத்திதைச்சுள்ளுமக்கரைத்திருததகற்கள்ளுங்கொண்டஞ்சு
 பசுவையும்விற்றான்மனத்தில்வசவையும்வைத்தான்
காத்தொடுகாமுப்பசுபாத்தொடுமாமுஞ்சேர்த்துக்
 காவில்விலங்குபரிக்கக்கோலுவிரண்டே ௱௪௭

தானுட்கைபோல்வஞ்சஞ்செய் தமீனுக்குவாலுப்பாம்புக்குத்
தலையுங்காட்டியெனக்காசைவலையையும்பூட்டித்
தேனுக்குப்பாவாயவள்மஞ்சள்மேனிக்குமாலாய்ப்பணமெல்லாஞ்
சிந்தியேபோட்டானெனையின்றசந்தியேவிட்டான்
ஈனத்துக்குவளர்ந்தன்வெகுமானத்துக்கவளாங்காலத்தில்
இங்கேசரியான்கனவும்அங்கேபிரியான்
ஊனுக்குமுயிராய்ப்பூமிக்குவானுக்கும்பயிராயழகர்க்
குதவும்பள்வேண்டியிவன்பதனங்காணாண்டே ௱௪௮

ஆருக்கும்பணியான்சிவலப்பேரிருக்குஞ்சனியான்வில்லெனும்
அரிப்பிட்டுக்கொண்டான்பல்வரிப்பிட்டுக்கொண்டான்
ஊருக்குளேற்றமிவளிளந்தச்சேரிக்குநாற்றங்குடும்பா
லூரார்க்குவைத்தான் இவனாலாராபிழைத்தார்
ஊருக்குள்மாடுமுந்திணைக்காருக்குளாடுந்தன்னை
எவருக்கும்பொதுவாயாட்கொள்ளுமவருக்குமதுவாம்
பாருக்குள்பறைந்தான்பணம்பலபேருக்குமிறைத்தான்மெத்தவும்
பயித்தியந்தொடுத்தான்சவுக்கினாலுயற்றுவீராண்டே. ௱௪௯

ஆனைக்குட்டியைப்போலேயருமை ஞானிசெட்டியார்க்கே பணம் பதினஞ்சுங்கொடுத்தான் கொழுஞ்சியார்குஞ்சுககட்டெடுத்தான் மீனைக்கொண்டொளிப்பான் கருவாட்டினுக்காய்களிப்பான், யான்சொன்னல்விப்புசகுமடிப்பானவள்சொன்னற் பாம்பையும்பிடிப்பான், கோனைக்கொண்டவனே கோன்றலைப்பேனைக்கண்டவனேபோயவள்குச்சினில்விழ்ந்தான் வயலெருவைச்சினிவாழ்ந்தான், பூனைக்குட்டியைப் போலொதுக்கிச்சொன்மோனைகட்டுடனேயிவன்முழுப் பொய்கொண்டுவருவான்சிக்கெனவையுங்களாண்டே. ௱௫௰

அச்சத்தைவிடுத்தான்இளையவள்
குச்சினிற்படுத்தான்நான்போ
யழைத்தாலும்வாரான்வயல்விரை
முளைத்தாலுங்காரான்
மிச்சினைவெல்வான் அவட்கொரு
உச்சிதஞ்சொல்வான்நான்போய்
பிடித்தாற்கைநெரிப்பான் இளையவ
ளடித்தாக்காற்சிரிப்பான்
கச்சையுங்கட்டான்வரவர
லச்சையுங்கெட்டான்
வேலைக்குக்கழுப்பிணிசெய்வான்நாளும்போ
யெழுப்பினால்வைவான்

சச்சைச்சாய்ப்பள்ளன் அவன்வெகு
  உச்சிதக்கள்ளன்-அடியாள்
கண்டதைச்சொன்னேன் அவன்வெகு
  லண்டன்காணுண்டே. ௱௫௧

எச்சுக்குப்பிறந்தான்--பரவரக்கூச்சத்தைமறந்தான்--இளையவள் இளமையைச்சூறித்தான்--மதிகேடன்--வளமையைப்பறித்தான்-நீச்சுக்குமேலே-நிலைப்பென்ன போச்சக்கையாலே--உழைப்பாதை கினை பதுங்கொல்லை--தேடியங்கழைப்பதுமில்லை-தீச்சுட்டதாரும்-பழித்திடநாச்சுட்டதேரும்-பள்ளனைச்-சீபென்றுபோட்டேனினிநான் — வாயொன்றுங்காட்டேன்-பேச்சிட்டுப்பாரும்-மறக்கோணல் — வாச்சிங்கள்நீரும்பயப்படப்,பிடித்தடிபிடியாய்க்குட்டையி-லடித்திடுமாண்டே.

பூராயத்துடனே-வாங்கின சாராயக்கடனும்—என்னிட-பிழைப்பிலுமிச்சம்—எனக்கெப்பக்-குழைக்கதே அச்சம்—போகப்பிழைத்தான் வீணிலேயூராருக்குழைத்தான்-தேடியே-பேய்த் தண்ணீர்க்கிறைத்தான்—தகப்பனார்-கீர்த்தியைமறைத்தான்-தோராயமென்ன— கொழுந்தியான்-மாராயஞ்சொன்ன—வண்ணான்-சுந்தரமென்றே, அஞ்சுபொன் சிவலைச்செங்கன்றைப்-பாராமற்கொடுத்தான்-இவள்வீட்டிற்- சோட்டிப்படுத்தான்-பள்ளனைப்பார்த்துடன்பிடித்துக்குட்டையிற் - சேர்த்துங்காணுண்டே. ௱௫௩

வேறு.

கப்பமதயானையைப்போலன்பாய்வளரும்
  கட்டுச்சேவன்றம்பராமற்பணமுழவைக்காய்வித்தான்
அம்புவியிலிளையாளிடத்ப்பிதந்தானென்று
  ஆடிநோப்புச்சோமன்வாங்கிவிமபாய்க்கொடுத்தான்
செம்பாசெட்டிக்கடைதனில்நம்பிக்கையாகநேற்றுச்
  செம்மறைக்காளையைவிலைதீரத்துக்கொடுத்தான்
சம்பாநெல்லெல்லாம்விற்றுஇபதுபொன்னுக்குக்
  தங்கச்சவடியிணையாளுக்குத்தான்செய்தாணுண்டே. ௱௫௪

செஞ்சாலிவகைதன்னில்அஞ்சாறுகலநெல்லைச்
  செட்டியப்பன்கடைதன்னில்வட்டிக்களந்தான்
மிஞ்சுமையல்கொள்ளிளையவஞ்சிதனக்கென்றுநேற்று
  வீரவாணிச்சேலைமனவாகவெடுத்தான்
வஞ்சகத்துடனேநாட்டுக்குஞ்சக்கோன்மகனுக்கு
  மாமனுக்குநூறுபொன்னைவேறேகொடுத்தான்
கொஞ்சபுத்திநினைந்திடும்வஞ்சகப்பள்ளனையின்று
  கூட்டிவந்துகுட்டைதனிற்போட்டிடுமாண்டே. ௱௫௫

புங்கன்செட்டிகடைதன்னிற்செங்கண்மயிலைக்காளையைப்
  பூலாப்பள்ளன்மகன்வெள்ளைசாலையில்விற்றான்

தங்கமோதிரங்கள்செய்யுமரங்கப்பனாசாரிகையிற்
சந்தோஷமாயைம்பதுபொன்னையப்பக்கொடுத்தான்
அங்கப்பள்ளன்சாகுதியுண்டுபொய்க்காளிபறிவாளதை
அத்தைமகன்பெத்திக்குரண்டாட்டைக்கொடுத்தான்
செங்கண்மலர்சகண்ணாருள்பண்ணைபாண்டே
செப்பினென்பள்ளனைக்குட்டைசேர்த்தாங்காணுண்டே; ()

கண்ணார்பூசைக்குக்கறக்குங்காராம்பசுதன்னைவிற்றுக்
காமன்செட்டிகடைதன்னிற்சோமனெடுத்தான்
தின்னக்கமுடனிதாயபள்ளிக்குச்சிந்தாக்குமுண்டாக்கச்
செட்டித்தட்டான்கையிலெட்டுப்பொன்னைக்கொடுத்தான்
எண்ணமில்லாமலினையாள்தங்கைவந்தாளென்றுசொல்லி
பொட்டுப்பொன்சரிகைச்சேலைகட்டக்கொடுத்தான்
புண்ணைச்சிலவுக்கொன்றுமிலாப்பள்ளிவாத்துக்குப்
பாழாக்கினன்பணமெல்லாங்கேளீராண்டே. ௱௫௭

மூத்தசெட்டியையழைத்துக்காத்துக்குவிட்டெள்ளையெல்லா
முப்பத்திறைவைகோட்டையிப்பக்கொடுத்தான்
கூத்திப்பள்ளிவிட்டிலேதானூற்றிருபத்தாறுகோட்டை
கட்டிவைத்தநெல்லையெல்லாம்வட்டிக்களந்தான்
சேர்த்துவைத்தசம்பாநெல்சித்தன்மகன்பெத்தன்கையிற்
சிலக்கென்றுவிட்டுச்செலவுக்குங்கொடுத்தான்
சாத்தியஞ்செய்திடும்பள்ளன்சூஸ்திரமெல்லாமடியாள்
சற்றேசொல்லக்கேளுந்தேவரீர்சித்தங்காணுண்டே. ௱௫௮

சட்டமிகுந்திடும்புள்ளிக்கட்டக்கொம்புக்காளையைச்
சாத்திகையில்நூறுபணந்தீர்ததுக்கொடுத்தான்
இஷ்டமிகுந்தமுகர்கம்பட்டவெருதைவிற்று
யெல்லிசெட்டிகடைதன்னிற்சல்லாவெடுத்தான்
கட்டழகியினையபள்ளிவட்டமுலைமீதணையக்
காணவென்றேபாபரணமேவண்ணுசெய்தான்
துட்டபுத்தியினைத்திடுங்கட்டழகர்பள்ளனைநீர்
கூட்டிவந்துகுட்டைதனிற்போட்டிடுமாண்டே. ௱௫௯

கலிப்பா.

சத்தகத்திரிமுக்கூடற்கண்ணார்பண்ணையாண்டவர்முன்
சித்தமுறமூத்தபள்ளிசெப்பிமறைந்தேகியபின்
பொய்த்தமொழிப்பசிமுதற்போனபள்ளனின்றுமெரு
வைத்தவயலுழறவநுவதும்போல்வந்தானே. ௱௬௰

சாடிமுற்றுபண்ணைசொல்.

விளைந்தநெற்கோட்டையின்னதென்றெண்ணி
விரைக்குக்கோட்டைநெல்லித்தனையென்றும்
களந்தனிற்சென்றபலவிரைவர்க்கமுங்
களவில்லாமற்கணக்கிட்டுச்சொல்லும்
அளந்தநெற்பொதியாதாயமுஞ்சிலவும்
ஆட்டில்மாட்டிலதிசச்சிலவிம்
வளர்ந்தமுக்கூடற்பண்ணைச்செலவெல்லாம்
வகையாய்ச்சொல்லடாமாமாலப்பள்ளா ௱௬௧

பள்ளன்சொல்—கலிப்பா.

பத்துவடித்தழகர்பண்ணையான்கேட்டபடி
வித்துவகைமாட்டுவதைமேழிபோக்கால்முதலாங்
கொத்துவகையத்தனையுங்கூட்டிவைத்துஞ்சிலவும்
வைத்தவிருப்புங்குடும்பன்மாருமற்கூறினனே. ௱௬௨

ஆறுலக்ஷத்தம்பதினாயிரக்கோட்டை நெல்லுண் டதிகவிளை வு, பேறுபோனதுபள்ளாசிலவுக்குப்பின்பு நற்பத்தினாலரைக் கோட் டை நூறுபோனதுகலமதகெட்டச்சொற்படிச்சிலவாயிரங்கோட்டை கூறுப்பண்ணையழகர்திருமதிட், கூலிக்கைந்நூறு கோட்டையுண்டா ண்டே. ௱௬௩

அன்னதானமடத்திற்குவந்த, அருகிகள்பாதேசிகளுக்கும் மன் னுமாமணிக்கோபுரவேலைக்கும், மண்டபந்தனில்வந்தநட் பூசைக்கும் பன்னுநான்மறைவேதியர்களுக்குந்தமிழ்ப், பாடுவோர்க்கும்பரிசனத்தோ ர்க்கும்முன்னுதாகஅளந்துக்கொடுத்தநெல்,முப்பதாயிரக்கோட்டையு ண்டாண்டே. ௱௬௪

தண்ணீர்ப்பந்தலுக்கைந்நூறுகோட்டைநெல்,சாமிநாதன்சடை யனுக்கீந்தேன்,நண்ணும்பூசைக்குமாலைசெய்வோனுக்கும்,நானூற்றுக் கலநெல்லுண்டொங்தேன், நிண்ணயத்துடனழகர்தன்பூசைக்கும் நித்த ங்கட்டளைதாசிகளுக்கும், எண்ணமில்லாமலேலசெலவிட்டநெல்,லெண் ணூற்றுக்கலநெல்லுண்டென்றுண்டே. ௱௬௫

பையரவணைத்துயிலுமழகர்தம் படித்தாத்தும்பலகாற்பூசைக்கு ம்,வெய்யாகப்பெரியநம்பியான்கையில்வேணுமென்றசிலவுக்குச்சம்பா நெல், கையாரவேயளந்துகொடுத்தநெற்-கணக்குவேண திருக்குதுகே ளும்ஐயாவெங்களையாளும்பண்ணாண்டவர் ஆயிரக்கலநெல்லுண்டென் றுண்டே. ௱௬௬

பண்ணைசொல்.

இன்னமுமுண்டானகணக்கெல்லாம் இசைந்துசொல்லு மெனக் கொளியாதே,சொன்னவார்த்தைதலைறிடிலோ வுன்னைத்துள்ளத்துள் ளச்சவுக்காலடிப்பேன் தண்ணீர்ப்பாய்ச்சலுமெரிவிகற்பமுந்தழைபுன்

னையுஞ்சந்தனத்தோப்பும், பண்ணுமாதளையிஞ்சியெலுமிச்சைபருவள
மெல்லாம்பள்ளாநீசொல்லாய். ௱௬௭

பள்ளன்சொல்.

அதிகமாய்ச்சொல்லக்கேளுமறுபத்தினாலுதோட்டமதிகவிளைவு
கதிருமுழங்குபழகர்திருமதில்கப்பத்துக்குங்காலவரைநம்பிக்குஞ்சகிரா
கவேமுக்கூடல்வாழுனுக்குந்தன்கிளைக்கு மெட்டாயிரக்கோட்டை எதி
ராகவேவயளந்துகொடுத்தநெல் லெண்ணூற்றுக்கலநெல்லுண் டென்று
ண்டே. ௱௬௮

வடகரைப்பண்ணைக்கல்லணைமேற்குவைத்திடும் வயல்நாற்பதுமா
நிலங், திடம்பொருந்தியமாமரச்சோலைதெற்குப்பாத் தெழுபத்தாறுமா
நிலம், இடம்பொருந்தியதோடிமண்டபத்தீசானியத்திலெண்பதுமாநி
லம்மடப்பெரியவடகரைபண்ணைக்கு வைத்திடும்வித்துநூறுயிரக்கோ
ட்டை. ௱௬௯

அன்னதானமடத்திற்குத்தெற்குஅயிரமாநிலத்திற்குமப்பால் க
ன்னலோங்கிவளர்ந்திடும்வாழை, கமுகந்தோப்பிற்கு ஐந்நூறுமாநிலஞ்,
செந்நெலோங்கிவிளைந்திடுஞ்சிற்றூற், றென்கரைப்பற்றிலெண்பதுமா
நிலம்இன்னம்பத்துவடகரைப்பண்ணை, எண்பதாயிரக் கோட்டையுண்
டாண்டே. ௱௭௰

பண்ணைசொல்.

மாட்டுவர்க்கத்திற்செய்ததுசூது வைத்தவாறும் வகையுமறிவே
ன்காட்டுவெள்ளாண்மைசெய்தகவசங், கண்டிலேனதைவிண்டிலையேநீ
தாட்டிவைத்ததவசவிதரங் தங்கரித்ததலமுமறிவேன் வாட்டமில்லா
மற்களவுசெய்பள்ளனைப்பறக்குட்டைகாலில்மாட்டிவிடடா. ()

பள்ளன்சொல்.

இப்படிச்சிலவிட்டதல்லாம் விருப்பதின்னமநேக நெல்லுண்டுதெ
ப்பனையொன்றுநான்சொல்வதில்லையூர், தன்னிலேபலர்சாக்ஷிகளுண்
டு, ஒப்பமாயுழுங்காளைகளொன்றுக்குமுனையில்லையுளகந்தாள்வார், அப்
பனைப்படிவந்தென்னைசட்சிக்கும், ஆண்டவரீரறிந்துகொள்வீரே. ()

காலந்தோறுமுக்கூடலிற் பண்ணைக்குத்தளவு செய்ததில்லையடி
யேனுன், சாலஞ்சொல்வான்முக்கூடலிற்பள்ளிசொல், தங்கரிக்கவேவே
ண்டாமென்சுவாமி, கோலஞ்செய்தனென்றுக்கிணைப்பண்ணைக், குற்றம்
போக்கிநீர்கொண்டாளவேணும், பாலனுவதுதேடியிடும்பள்ளன்பட்
சம்வைத்தென்னையாட்சியுமாண்டே ௱௭௧

தேருலாவுமணிவீதிசுற்றிச்சிறப்புசெய்தவர்க் கேழரைக்கோட்
டைபேருலாவுந்திருமணவாளர்தம்பெரியபூசைக்கும்பதினறுகோட்
டைகாருலாவுமழகர்நந்தவனக்காவற்காரருக்குக்காறரைக் கோட்டை
எருலாவுந்திருப்பணிதக்சனுக் கெண்பதாயிரக் கோட்டை யுண்டாண்
டே. ௱௭௨

ஆறுநூறாயிரக்கோட்டைநெல்லுண்டு அக்கரைப்பண்ணைக்கீழ்க்கட்டிவைத்தேன், காறுவெள்ளாண்மைசெய்ததவசங் களஞ்சியத்திலெண்ணாயிரங்கோட்டை சேருவதாவும் தருநெற்போகச் சேஷமெண்பத் தெண்ணாயிரங்கோட்டை, கூறுமடபண்ணைக்கணக்கெல்லாஞ் சொன்னேன் கும்பிட்டேன் கூச்சுக்கேபோறேனாண்டே. ௧௭௫

பண்ணைசொல்.

ஆதிநாள்தொட்டுச்சொன்னகணக்கை யாராய்ந்துபார்த்தாலடுக்குமோபள்ளா, போதித்தாயுன்திருட்டு பிரட்டெப்போது சாட்சியைப்பின்புவிசாரிப்பேன், சூதுசெய்த அழகர்தன்சொம்மைச் சோதியாமலேசும்மாவிடுவேனோ, சாதிக்கும்பள்ளனைக்கைப்பிடியாகச் சாத்திக்குட்டையிற்போட்டுவிட்டார். ௧௭௬

தச்சன் கலிப்பா.

மேதினியோர்கள்போற்றும விமலனாமழகர்நாட்டிற்
காதலாய்வந்தபண்ணைக் காரன்றனேவலாலே
ஆதிநாள்வந்தபள்ளனழகனைக்குட்டைபோடச்
சாதனையறிந்தசிற்பா சாரியுந்தோன்றினானே ௧௭௭

வண்டுளவுதுளசிமணிமார்பிலணிந்தோன் மாயவனாந்திருக்கூடலழகர்பண்ணையிற், கண்டிதமாய்வேலைகொள்ளுந் தச்சனாண்டே. யென்னகாரணத்தாலருவிப்பாடுகேழுறவேணும், தொண்டையஞ்சேர்செந்திருவாய்மங்கைமார்க்குச் சுத்ரநிலைவகுக்குஞ்சுந்தரவேளே, அண்டருநாயகன்றனருளினாலேதனம் அன்றுமுதல்வேலைசெய்யுந்தச்சனாண்டே. ௧௭௮

பண்ணைக் கலிப்பா.

வந்தாயநீதச்சாகேளு மரத்தினிற்குட்டைசேர்த்து
செந்திருஅழகர்சொம்மைத திருடினான்குடும்பன்றன்னை
வெந்திறற்பள்ளனெல்லா மிக்கவேகாணவிப்போ
சந்தேகமிலாமற்குட்டைச் சாற்றுவாய்சாற்றுவாயே ௧௭௯

பள்ளன்-புலம்பல்.

அலைகடலிற்பள்ளிகொள்ளுமாயனாரி மாய்கைதானோ
கலைகணைச்சடையணிந்த கைலைதேவாகலிதானோ
மலைகுறையுமபிர்மதேவர் மன்னித்தாரோதுன்னுகுட்டை
உலையதுவாய்மெழுகதுபோ லுருகுதேயென்னுள்ளமெல்லாம். ௧௮௦

சிற்றிடையாள்மூத்தாள்வார்த்தை தேவர்பண்ணையானறி
கற்றுமேபலர்நகைக்கத் துன்னுகுட்டையிற்போடவேண்டும்
பற்றியுள்ளதோர்காரை யாவேயழகர்பண்ணைதன்னிற்
குற்றமேநான்செய்ததில்லை குட்டைகாலிற்போடவேண்டாம். ௧௮௧

## குட்டையிற்புலம்பல்.

மன்னவர்கள்போற்றவரும் பண்ணைக்காரனார்மூத்த, வச்சசொற் னைச்சடித்தலைவனை வஞ்சினிலைவைத்தார் என்னமோதெரியாதவன் சொன் னசாடிதானை எட்டுக்குறிந்தவிதிவந்துகூடியே, தானுங்குட்டை தனிலகாணிமைப்பட்டேனோ துடிதுடித்துவட்டபதறிச்சோர்ப்பிவிழு வேன், அன்னவாகனத்தயனெழுத்துமுறையோ ஆதியிலேதாகினுநான் செய்தகுறையோ. ௧௮௨

மேதினியிலெவர்க்குங்கீர்த்தியாதையும்போச்சேதோண்டி
வீம்புக்காரிசொன்னசாடிதான்பெலத்துச்சே
சாதியாரெல்லோர்க்குமென்னை யேசவுமாச்சே மாதன்
சரியொத்தவர்முன்னே கூசனுமாச்சே
கோதில்லாதமாதவர்க்கிது ஞாயமாமோ
கோட்டிகொள்ளுதன்மேலே மீட்டுந்தொல்லையோ
ஆதினத்துக்கோளுக்காரா நீயுமிப்போது
ஆசைமருதூரிலேக்கொரு சேதிவச்சொல்வாய்

## இளையபள்ளு-கலிப்பா.

ஆரணமறையோர்போற்று மழகர்தன்பண்ணைதன்னில்
வாரணப்பெலத்துள்ளானை மருணலனமூத்தப்பள்ளி
சோரமென்றியம்பக்கேட்டுச் சோரபுறக்குட்டைபோடக்
காரணமேத்தவென்று கலங்கியேபுலம்புவாளே. ௧௮௩

## தேடல்.

ஆரணம்புகழழக ரடிமைத்தொழிற்புரியும்
வாரணப்பெலத்தானை வரிசைக்கணவனைத்தான்
பாரினிற்களவுசொல்லிப் பருத்தமரத்திற்குட்டை
சேரவிருகால்தனிலே சேர்த்தியடித்தார்காணேன்
என்னசெய்வேன்பிரமதேவா என்றலைவிதிவசமோ
விதிபோல்விதிப்படியோ பிரமதேவன்சொற்படியோ
தலையிலெழுத்திதுவோ தலைகாலுஞ்சொற்படியோ
"கலைபிரசுதமானதுபோல்" கண்கலங்கியிருக்கலாச்சே. ௧௮௪

ஐயையோமுக்கூடற்பள்ளிசென்று பண்ணையாண்டவர்முன்னி ன்றுயரதக்கன்னி, பொய்களவுசாடிமெத்தச்சொல்லியென்பள்ளனை யு ட்பூட்டிணைக்குட்டைதனிலிருந்து, கையுமெத்தனையதுபுண்ணு பொங்குதைதனிட நாயகனைக்காண்பதென்றுசென்று, டையரவணைத்துயி லுமழகருனிதுவோ பாவிநானிருந்திவேளைப்பழியே. ௧௮௫

## சிந்து-அடதாளகாம்போதி.

பழிகாரமுக்கூடற்பள்ளிசாடிசெய்தபள்ளனென்றுமுகம்பார் மல் வழிபோற்றக்களவெல்லாந் தலைமேலேவைத்திட்டுப்பெத்துக்

குழி தர்ன்கொழியலரிசிவிட்டார் ஆங் குப்பையைக்கிண்டுங்கோழி போ ணபலைப்புதுக்கினன், அழிபாதகாசழியுமே யானேன் செய்வேளை முகந்திருக்கியப்பள்ளா. ௧௮௭

பள்ளன்சொல்.

மூடுகவாசிபமூண்டுகுண்டுணிக்காரிமூத்தபள்ளிபார்க்கவுமின்னம்வருவாள், கடுவேதெய்வஞ்சோதித்ததுவேசலையேபண்ணைகபினர்க்குஞ்செவிக்கண்ணுச்சே, கடுகப்பேய்விடுநீ சாமைசக்தியில் கல்லெறிந்ததையாச்சே, வடிவந்தான்மறைக்கவுந்தானபோமோ வருவதெல்லாம்வந்து திருமருதூரிற்பள்ளி. "வருவனதாமேவரும்." ௧௮ நன்னூல்

பள்ளிசொல்.

அத்தருணைமருதூரில்வந்தென்னைக்கண்டு ஆசைமிகவாகியேதொந்து. மெத்தவேடபள்ளருக்குச்சொல்லிவைத்தனை நீ மேவியேசரடுசெய்தனிதியோ, பத்தர்தொழுமழகர் பண்ணையாண்டார்சக்களத்தி பாவி சொன்னசாடிதனைக்கேட்டார், முத்தமிழ்சேர்மூக்கூடற்பள்ளாவுந்தனுக்கு முறைமையோகுட்டைவாரவறியேனே. ௧௮௮

பண்ணைசொல்.

மருதூரில்வாழுவந்தபெண்ணே-யொருதனுக்கு-மதவைவாகிரிதந்தகண்ணே, திருமேவுமழகர்க்கிதுவரவோ-நீயுமிக்கர்-சிறையில்வந்தூதிண்டிமுகலமே போ. தெரிவையர்கள்பணிபூண்டமின்னே-உந்தனிடமிக்கைமெத்தகலங்காதேசொன்னேன், அருமையில்லாமூத்தபள்ளியிங்கே-யிதனைக்காண-அவள்வருமுன்போவாய்நீயிங்கே. ௧௮௯

அகவல்.

திருமகள்கொழுநன் செயசக்ரபாணி, அரியமாதவர்கள் அன்புடன்வணங்கும், பாதபங்கசத்தான் பசுபதிபாபன், மாதவன்முராரி வைகுந்தவாசன், கவுத்துவமணிந்தோன் கார்முகில்வண்ணன், சொந்தினைபளந்தோன் தேவர்கள்தேவன், பார்மகள்பூமகள் பாதம்வருடச், சீர்பெறயோகத் தெளிந்துகண்விழித்தோன், ஆரியன்கூடல் அழகரைப்போற்றி, விரியமுட்டனே விளங்கிடுக்கவை வா, சந்தத்மூல்கோர்தான் புகழ்ந்துபா, எந்தனுக்காக ஈசனுருறையும், யாமருதூரில் வந்தென்னைக்கண்டு, தான்மயலபெருகித் தனுமதன்கணையால், தன்னையேமறந்து தளர்ந்துமெய் சோர்ந்து, என்னையேமறந்து இவ்வுலகதனில், தந்தைதாய்பந்துசனங்கள் மதியாய், எந்தனைவிவாகம் இயனுடன்முடித்து, பூமரம்போலே பொருந்திமெய்களித்துக், காமனுமாதிபோற் கலந்துநாமிருக்கும், நாளையிலுந்தன் நன்மைதேசினிய, வாசனைவெளைநகைத வரிவிழிமூத்தாள்; பரிவிகோசத்தாற் பண்ணையார்பக்கலே,

மேவியேயுந்தன் மீதினிலில்லாக், களவுகள்புகலக் காவலன்கேட்டு, அளவிலாக்கோப மாகியேயுந்தன், காலினிற்குட்டை தனைக்கவேபோட்டு, கோலியசிறையிற் கொடும்பசியாக யானைபோலிருந்த ஆண்மைபோய்மெலிந்து, பூனைபோலொடுங்கிப்புலம்பிடக்கண்டேன் கண்டவுடனே கலங்குதென்சிந்தை, மண்டையிலுனைக்கு மலரயன்விதியோ, இந்தவிதிதா னினிவருமென்று, சிந்தைதனிலே தெரிந்திலென்கணவா. ௧௧௧

பள்ளன்சொல்.

புத்தமுதேமொழியாளேகண்ணேயிதனைக்கண்டுபுலம்பியேயழுகாதேசொன்னேன், பத்தியுடன்பரிவாகவாழ்ந்தோமதனைக்கண்டு பாவியவள்முக்கூடற்பள்ளி, மெத்தவேசித்தமதுகலங்கியெந்தனிட மீதில்லாச்சாடிதனைவிளம்ப, குற்றமென்றுபண்ணையானுமறிந்தேன்கால்தனிலேகுட்டைமாஞ்சேர்ந்தினர்காண்மின்னே. ௧௧௨

பள்ளிசொல்.

பன்னுகத்திற்றயிலுமெங்கள்மாயோன் பண்ணைதனிற்பலநாளும்வேலைகொள்ளுங்குடும்பா, முன்னேவந்தமுக்கூடற்பள்ளிசொல்லாலே மோசஞ்செய்ததாலென்றுபண்ணையானும, உன்னையின்றுகுட்டைதனிற்போட்டபண்ணை யானையுபசரித்துமன்னிப்புக்கேட்டேன், என்னகுற்றஞ்செய்தாலுஞ்சொல்லிக் குட்டைநானெப்படியுமீட்கிறேன்கணவா. ௧௧௩

கலிப்பா.

கொண்டபள்ளனென்றறிந்து குடிகேடிமூத்தபள்ளி
பண்டுமுன்பழியதனைப் பாவித்தாள்பண்ணையர்முன்
சென்றுபண்ணையாண்டவர்க்குச் சேதிசொல்லிகுட்டைதனை
மீண்டுவாமருதூரான் விரைவுடனேசென்றாளே.

சிந்து.

வேதியனையீன்றவிமலர்பண்ணைதனிலே, காதல்மதன்ரதிபோற் கலந்திருக்குநாளில், சூதுமிகவறிந்ததொன்மையவள்பள்ளி ஆகாவில்லாமல்அநேகங்கள், சோதிமுகப்பள்ளன்சோரமதுசெய்யான், நீதியல்லவைய நேமாத்திற்போட, பாதிமதிசூடும் பரமனடியாள்நான், சாடிவள்சொன்னாள் தானறிவீராண்டே. ௧௧௫

சத்துருவானசதிகாரிமுக்கூடற்பள்ளியவள்
விஸ்தாரிகாமவிராகத்தால் நொந்துபொய்யுரைத்தாள்
எத்திசைபோற்றிடுமீசர்தன் பண்ணையிலாண்டேயுந்தன்
சித்தந்தெளிந்தெந்தன் சிறியாள்முகம்பாருமையா. ௧௧௬

பத்திமிகும்பள்ளன்சத்தியவான் பண்ணைமாண்டேபழி
பாதகியாள்சொன்னவேதைப் பொறுப்பீர்காணுண்டே
கொற்றடியானுன் குடும்பனையுன்மன திரங்கியெங்க
ளூற்றூர்நகையாமலுடன் விடவேணுங்காணுண்டே. கசுஎ

பண்ணைகலிப்பா.

மூத்தபள்ளியைத்தூத்தி முக்கூடற்சொம்மையெல்லாஞ்
சேர்த்துன்வத்தகொள்விதமுஞ் சித்திரமுநானறிவேன்
வார்த்தைமிகச்சொல்லவந்தாள் மருதூநற்பள்ளிகள்ளி
சூஸ்திரமுநானறிவேன் றூரத்திவிடுகேசற்காரா. கசுஅ

இளையபள்ளி பள்ளனோடுசொல்.

அன்னைமுருகோனைப்பெற்றோ னழகர்பண்ணைவாள்குடும்பா
என்னைமணஞ்செய்ததால் வுனக்கிக்கவிதிவரலாச்சே
நன்னயஞ்சேர்நயினார்பக்கல் நானுரைத்தேன்றள்ளிவிட்டார்
முன்னைமணஞ்செய்துகொண்ட மூத்தபள்ளிமீட்பாள்போறேன். ()

மூத்தபள்ளிசொல-கலிப்பா.

தாரமிரண்டானாலுந் தங்கணவன்வாஞ்சையினால்
வாரமுடன்முக்கூடல் வந்தபள்ளிதந்திரமாயக்
காரணமேயென்றுபண்ணைக் காரனுக்குச்சொல்விமனச்
சோரமுடன்பள்ளனுக்குச் சோறுகொண்டுவந்தாளே. கசுகூ

சிந்து.

எங்கேகிடக்கிறான்பள்ளனயினோ யேறுதவிண்ணப்பமொன்றுண்டு, செங்காவென்னக்குமூத்தவளை துக்கோ தெய்வத்துக்காக்கிப்படைத்தானும். அங்கேயிருந்தாட்டுக்கறியுஞ்சோறுங் கொடுத்தனுப்பினல்யான்றனித்துண்பனோ, உங்களடியானுக்குக்கொடுத்துப்பார்த்தாலுண்பானோவுண்ணானோவாண்டே. உா

செந்திருமகளோங்குமுக்கூடற் றிருவழகர்பண்ணை தனிலே,எந்தனுக்குஇளையகாலாடி யேதோதெய்வத்துக்காக்கிவைத்தாளோ, அந்தமாகியசோறுங்கறியும் அனுப்பினு லுன்னையல்லாதுண்பேனோ,சொந்தக்காரியுநானுனக்கப்பாற் சொல்லுறேன்சோற்றையுண்டாபள்ளா.

வேறு.

கட்டமுகுடன்பட்டுச்சேலையுடுத்திக்குளக், கருவாடுங்களுங்கூட்டிக்கறிசமைத்துத்,திட்டமுடனேசம்பாச்சோறும்வடித்துவந்தேன்வி

நேகிதமாயுண்டிடுங்குடும்பனாரே, சக்களத்திவந்தாளோகுடும்பனாரே யுந்தனக்கு புத்திசொன்னாளோகுடும்பனாரே, பக்கமதில்நின்றாளோ குடும்பனாரே இன்றுபடுக்கச்சொன்னாளோகுடும்பனாரே,தெய்வந்தன்விதி யல்லவோகுடும்பனாரே குட்டைமேவினதுன் காலிலேகுடும்பனாரே,கு துமிகச்செய்யலாமோ குடும்பனாரே-ஒரு-சொல்லுரைத்தாலாகாதோ குடும்பனாரே,கோகனமேவுதிருமாதுநேயன் புகழ்கொண்டகுமபு விதன்னையுண்டவாயன், காகமிசைத்துயிலழகேசர்காட்டில்-தினம்-ந ன்மையுடனேவாழ்குடும்பனாரே. ௨௱௨

மருந்துக்கள்ளி மருதூருப்பள்ளி வடகரைதன்னில்வந்தபிறகு திரும்பிப்பேசினவார்த்தையுங்கேளான் தெற்கேபார்த்தால்வடக்கே பார்ப்பாய், பருந்தாளுக்கொண்டகொப்பத்திலானைபோற் பட்டாயே மரக்குட்டைதனிலே, பொருந்தத்தன்வினைதன்னைச்சுற்றும்விதிபொ ய்க்குமேசொல்லாய்முக்கூடற்பள்ளா. ௨௱௩

பள்ளன் சொல்.

சுத்தியேசிபலருங்கதைக்கத் தொடர்ந்துபண்ணை கயினார்தாங் குச், சித்தமேசிப்புசழ்ந்துபொய்யெல்லாஞ் செப்பியென்னைத்திருட ன்போலாக்கிப்,பத்தியோடேநீபாலுஞ்சோறும் பரிந்தாலு மென்மன ப்பொருந்தாது,தித்திரிப்புளிசெய்யவேண்டாமுனசேதியெல்லாமறி வேண்டிபள்ளி. ௨௱௪

பள்ளிசொல்.

முட்டியிட்டுக்குனியும்பழங்கதை முதலிக்கிறாய்பேதலிப்பேது க்குகெட்டிக்கெட்டிபிள்ளையாள் சொல்லெல்லாங்கிழித்துப் பண்ணைப ர்க்கேறுதுமோ,கட்டிப்போவும் போமோவரண்யனை காரியங்களுங் கைக்குள்ளேயுண்டோ, வட்டிலுக்குள்வாயைவைப்பதெல்லாம வடி வழகத்திருநாமப்பள்ளா, ௨௱௫

பள்ளன் சொல்.

பக்குவஞ்சொல்ல நீதியோயாணித்தப் பாடுபட்டு பிணியறியே னே,சக்களத்தியவளுநன்னுனக்குச்சரி சொன்னாலிந்தத் தாழ்வுகளேற் குமோ,மக்களானையென்னுனையுன்னுனைநீ வார்த்தைகஞ்சிக்குடித்துக் கிடப்பான்சொற்கேட்பன்,விக்கல்வாய்ப்பண்ணையாண்டவரைக்கேட்டு மீட்டுக்கொள்ளடிமுக்கூடற்பள்ளி; ௨௱௬

மீட்டுக்கொள்வதற் கென்னாலேலாமோ மின்னும்பின்னு மதிந்தோனீசொன்னும், தேட்டமாய்ப் பண்ணுமோகத்தாலே நான்சேறவந்ததற்கெல்லாமற்போச்சே, பூட்டுமோசைதரு மருதூர்ப்பள்ளி பெண்டிருந்தவன் கண்டென்னை மீட்பான் வாட்டிக்கள்ளி வருந்துன்னை மீட்கும வடிவழகத்திருநாமப்பள்ளா உ௱எ

பள்ளன் சொல்.

மிஞ்சிப்போனதற் கென்செய்வலேனும் விருந்துவிட்டபின்வெட்டுவதுண்டோ, பஞ்சுபற்றிச் சுப்பதுபோலப் பழாபலைகையின்னம் பற்றவைவாதே, கொஞ்சப்பேச்சைச்சொல்லாதேவாய்த் தண்ணீர் குடித்தானுங்கொப்பளித்தானுமாமோ கெஞ்சிப்பண்ணை நயினாரைமன்னிப்புகேட்டுபோரு முக்கூடற்பள்ளி. உ௱அ

பள்ளிசொல்

பஞ்சணைப்படுக்கையெங்கே பலதாரிமோகமெங்கேபள்ளா மஞ்சுவாவிகொண்டையெங்கே மாணிக்கமாலையெங்கேபள்ளா அஞ்சவென்னையடிப்பதெங்கே ஆங்காரக்கோபமெங்கேபள்ளா கஞ்சவிழிபின்னையாளோடேசுகிதசுகிதமெங்கேபள்ளா மாளுபதக்கமெங்கேவச்சிரக்கடுக்கனெங்கேபள்ளா பாரக்கடகமெங்கேபத்துவிரலாழியெங்கேபள்ளா வாரித்துப்பட்டியெங்கே வல்லவட்டத்தானுமெங்கேபள்ளா ஊளைப்பகைப்பதெங்கே புதுருசாவைவதெங்கேபள்ளா கொத்துச்சரமுமெங்கே கொண்டைப்பூதொங்கலெங்கேபள்ளா மத்தகெஜபலமுமெங்கேமாதர்கள் தண்டையெங்கேபள்ளா வெற்றிலைச்சுருளுமெங்கே வேசியருறவுமெங்கேபள்ளா குத்துமுலைப்பளியோடே கொஞ்சிவிளையாடலெங்கேபள்ளா இருக்குச்செருப்புமெங்கே இன்னரைப்பாட்டுமெங்கேபள்ளா சுருக்குப்பையதானுமெங்கே சுண்ணாம்புக்காயுமெங்கேபள்ளா அலுக்குக்குலுக்குமெங்கே ஆசாரவார்த்தையெங்கேபள்ளா மெலுக்காய்நடப்பதெங்கே மீசைமேலேகையுமெங்கேபள்ளா கட்டிலெங்கேமெத்தையெங்கே காளாஞ்சிதானுமெங்கேபள்ளா சட்டப்புனுகுமெங்கேசவ்வாது பூச்சுமெங்கேபள்ளா- இஷ்டமுடனிளையாளோடே ஏகபோகந்தானுமெங்கேபள்ளா-மட்டமுலைப்பள்ளியோடே மருவுஞ்சுகிதமெங்கேபள்ளா-சொல்லச்சொல்லக்கேளாமல் துரத்தியேயென்

னையடித்தாயேபள்ளா- குல்லச்சிறிக்கியாலே - குட்டைகாலிலடித்துதேபள்ளா. ௨௱௯

பள்ளன்சொல்

சாதியோர்களெனைநகைப்பாரித்தச் சளமெனக்குப்படமுடியாது-நீதியோவென்னைக்குட்டையிற்போட்டிக்த- நிஷ்டூரமெத்தநீசெய்யவேண்டாம் ஆகிராணராணைப்மடிக்கு அனுதினமுன்னைக்கூடியிருப்பன், காதலாயினிப்பண்ணைக்காரனைக்கண்டு கால்மரங்கட்டவிப்பாயே. ௨௱௰

பள்ளிசொல்.

தெந்தினந் தெந்தினந் தெந்தின வித்தைகளென்முன்பாராட்டாதேபள்ளா தென்மருதூருபள்ளியாற்சியென்றுபோகாதேபள்ளா, இந்தவித்தைகளெல்லா-மெங்கேபடித்தாய்பள்ளா, உந்தன்- இச்சகத்தாலேஇணங்குவனோநான்பள்ளா. ௨௱௰௧

பள்ளன்சொல்.

ஒப்புக்குவைப்பாயினேயவளோடேநான்வாழ்ந்தேன்
ஊநாரிவெள்ளாட்டி காதலினானுன்னைமறந்தேன்
தப்பனா செய்தேன் காமக்குரோதத்தாற்றள்ளிப்பிழைத்
தான்பொறுக்கவேணும் தஞ்சமுனக்கடிபள்ளி. ௨௱௰௨

பள்ளிசொல்.

நட்புமிகுந்தேன் ஆசைபரவசத்தாலே யுன்னைநானழைத்தேனென்னைத்தானடித்தாய் வெகுதொல்லை, மைப்பொருங்கண்ணி மருதூராள்கைமருந்தாலேநீ யென்வாழ்வைக்கெடுதெதெந்தன், மானங்குலைத்தாயேபள்ளா. ௨௱௰௩

பள்ளன்சொல்.

பாவத்துக்கென்செய்வேன் பாற்கடற்பள்ளிகொண்டோனேபங்கயத்தோனெழுத்தின்படியென்றறியேனே, கோபத்தைவையாதடியென்மீதிலமூக்கூடற்பள்ளியந்தக்குத்துமூலைப்பள்ளியந்தம் விட்டேனின்றுதள்ளி. ௨௱௰௪

பள்ளிசொல்.

ஆவலுடன் சொல்லி யென்னை யிணக்கவோ பள்ளா - நன்றாச்

சாச்சு ஏழைமதியுரையாதேநீபள்ளா மூவாமருந்திட்டு என்னைப்
பிரிம்பித்தசள்ளியுன்னை மீட்கவிரகறிவாளந்தத் தந்திரப்பள்ளி,

பள்ளன்சொல்.

தூராளேனூரார்நகைக்கவுடம்பெடுத்தேனே படுந்துன்பத்
தைப் பாரடிவம்புமறந்தபெண்மானே பாராயோமுன்னேயிருந்
ததிருப்புமிப்பாடும் பழிபாராமல் மீட்பதுனக் கிதுகீர்த்தியைத்
தேடு. ௨௧௬

பள்ளிசொல்.

ஊருக்குமேலாதுநீசெய்த தீவினைபள்ளா உழக்கோ
லாலடித்தென்னை யோட்டிவிட்டாயே நீபள்ளா-கூறுதேயென்மு
ன்னே மாமாலப்பஞ்சுபண்ணாதே அந்தக்குலச்சிறிக் கிழிலேயவ
ளை சொல்லேத்தள்ளாதே. ௨௧௭

பள்ளன்சொல்.

ஏற்குமோவுன்சொற்பண்ணை நயினார்க்குஇன்பத்தைச்சொ
ல்லித் துன்பத்தைநீக்கு, போக்குவார்த்தைகள் சொன்னதெல்
லாம்பொறு, புத்திவந்ததுன்புண்ணியத்தாலே, ஆக்கவுஞ்சமர்த்
துண்டடியுன்னாலே, யழிப்பதாளுக்காலட்டியுமுண்டாமோ, கே
ட்குமுன்சொற்கனவில் மறவேன் கேட்டுக் குடையையுமீட்டுக்
கொள்ளடி, ௨௧௮

கொண்டி-ஏசல்.

அழகுதென்மருதூரிற் பள்ளிதந்த ஆவலெங்கேஞைத்தகா
வலெங்கே, களவுசெய்காரியமெங்கே யுந்தனிட கட்டுமெங்கேவ
சீகரப்பொட்டுமெங்கே, சந்திரகாந்தப்பாகுமெங்கே தங்கச சர
முமெங்கே பூச்சாமுமெங்கே, இரந்திரமேகப்பட்டுடையெங்கே
இடையினிலிச்சைசவாய்க் கட்டுங்காங்குக் கச்சையுமெங்கே, படி
யளாளுமெங்கேமார்பிற்றும்பிப் பதக்கமெங்கேயிளையாளொ
துக்கமெங்கே, குடிகிலேகோத்திரமெங்கெ யெண்சக்களத்தி கோ
பமெங்கேபிரதாபமெங்கே, சங்கீதகின்னரியெங்கே நீப்படித்த-தந்
திரமெங்கே மாயமந்திரமெங்கே, மேலிவிட்ட வல்லவாட்டெங்
கே கட்குடி-வெறியுமெங்கே சோறுகறியுமெங்கே, காவிலிட்டமி
ஞ்சியெங்கே உந்தன்கைப்பிலமுமெங்கேமாய மைப்பிலமுமெங்
கே,சித்திரமயக்கமெங்கே உந்தனிட-நீராட்டெங்கேஇளையாளி
டதாராட்டெங்கேவத்திரப்பட்டுடுவதெங்கேபொன்சிலம்புச்சட்
டமெங்கேஇளையானோட்டமெங்கே,பொன்னகைகட்டுவளையெ
ங்கே நல்லகெந்தப்பொடியுமெங்கேவளைதடியுமெங்கேஇருகாவி

ச்சுமெங்கேஇளையாள்குச்சி,விருப்புமெங்கேவில்லை செருப்புமெங்கே,காதிற்கடுக்கன்போச்சே கற்பதித்தகணையாழிமேல்முருகுஞ்செலவாச்சே ஜாதிஜனமேலாச்சே நமதுசரியொததபள்ளர்முன்னே கூசலாச்சே வீதிவரக்கூசலாச்சேகுட்டைதனில்விதனப்பட்ட விருந்தழுகலாச்சே மூக்குத்திதான்போச்சே யென்புத்திமோசம்போச்சே மனதாயாசமாச்சே தாய்க்கினிமே லென்ன சொல்லுவேன் என்னைச்சரசமாய்பேசுவான்தாயார்பேசுவாளோ உன்னைப்பார்க்கவந்தபாவத்துக்குத்தேதவஷம்,பலித்துகைமேலே லபித்ததுகாண் சந்தேகஞ்சற்றேதோணுதே யிவர்வசந்தன்னிலுண்டு மனதெண்ணுதே இப்போ உந்தன்மடியெங்கே பாக்கட்டும் மூக்குத்தியொளிக்கவேண்டா மென்னுடன்களிக்கவேண்டாம்இந்தலாயிவர்மடியில் மூக்குத்தியெடுத்தேனிவர்களவைப்பிடித்தேனே என்னபுத்திநினைந்தீர்காண் இங்கிருந்து எழுந்திரும்வெட்கமில்லையோ, இப்பநாணமில்லையோ இப்பரோஷமில்லையோ இப்பதன்னவானதினாலே யிந்தப்பிழை, தான்பொறுத்தேன்மனம் நானொருத்தி வீடுனக்குவேம்பாச்சோகாலிற்குட்டைவிழுந்தபிறகிருந்தழுகலாச்சே பாடுனக்குப்படலாச்சே நமதுபந்துசனத்தார்பலருமேசலாச்சே, ஏலங்கிரும்படைக்காய்துளிர் வெள்ளிலையுமெங்கே புகையிலையுமெங்கே, வாலவயதினாற்கைகொடுத்த மூத்தாளைமறக்கலாச்சே சிலையிலிருக்கலாச்சே சாலமந்திரக்காரிமருதூரிளைய சக்களத்தியால்வந்ததாழ்வாச்சே தந்தனதானன. ()

பள்ளன்சொல்.

கஞ்சிக்குஞ்சோற்றுக்குங் கள்ளுக்குஞ்சுள்ளுக்கு மலைந்தேன்படுங்கர்ம்மத்தைப்பாடி வர்ம்மத்தைப் பாராதே யலைந்தேன், அஞ்சச்சிறைச்சாலை குட்டையிலென்னைநீ போட்ட அழகர்மேலாணை யுனைமறவேன்சீமாட்டி.

பள்ளிசொல.

கண்ணீர்மலங்காதே கண்ணர்தன்பண்ணையிற் பள்ளாபண்ணையகாரர்க்குச் சொல்லிநான் காலமரமீட்கிறேன் கணவாலுன்னுக்குமஞ்சாதே யுள்ளங்கலங்காதேகணவா, உன்னையோனாந்து நாலிலுடம்பதைத்தேற்றுறேன்கணவா, இன்னுவிடிந்ததுஎன்கோபமுந்தெளிந்தேனேஇந்த எண்டிசையோர்புகழ ழகாருளிதுதானே, நன்றாகவேபண்ணையாண்டவர்முன்னே நான்சென்று, அரைநாழிகையிற் குட்டைநான் மீட்டுக்கொள்ளுகிறேன் கணவா.

கலிப்பா.

சத்தியமாய்ச்சொன்னபள்ளன் சற்றுமனங்கோணாமற்
புத்திசொல்லியுன்சிறையான் போய்மீட்பேனென்றெழுந்து
முத்திதருமாலழகர் மூக்கூடன்மூத்தபள்ளி
யத்திசையுனின்றுபண்ணையாண்டவர் முன்சென்றாளே ௨௨௨

சிந்து-ஆதி-ஆனந்தபைரவி.

ஐயாபாரக்கும் மைக்கும் பிட்டேனாண்டேயும்மை யல்லாவோதேடியடியாளிங்கே வந்தேனாண்ட கையாரக்கண்டகளவும் பொறுப்பீர் காணாண்டே-பள்ளன்காவலைக்கண்ணால் பார்க்கப்படாது காணாண்டேதருமத்துக் கிந்தப்பிழையைப்பொறுப்பீர்காணாண்டேமூலை, சாய்ந்தால் வயிறல்லவோ தாங்கவேணும் பண்ணையாண் டேமர்மத்தைப் பார்த்தாலவன்மேல் தப்பில்லையாண்டே தென்மருதூர்ப்பள்ளியால்வந்தபொல்லாப்பிதுகாணாண்டே

தேடியிடும்பள்ளன் பின்னைக்கினைகண்டீராண்டே, இனித் தேவரீர்சித்தமென் பாக்கியங்காண்பண்ணையாண்டே, ஆடிகாலாவதிவேளாண்மைநாளைச் செய்யுவாண்டே, பள்ளன் அல்லாமற்பயிராரிடுவர் பண்ணையாண்டே, சட்டமுடன் சட்டபிணைதானும் என்பிணையாண்டே போய்த்தண்ணீர்குடித்தவெறியால் மூதற்சொன்னானாண்டே கட்டளையிட்டபடிபுத்தி கேட்பான்காணாண்டே, பள்ளன்கால்மரந்தன்னைக் கழற்றும்பண்ணையாண்டே. ()

மூத்தபள்ளிசொல்-கலிப்பா.

அழகர்தன்பண்ணைக்கேற்ற அடிமையாய்மூத்தபள்ளி
களவுசெய்பள்ளன்காலிற் கனமரக்குட்டைமீட்டுக்
அழுதுயர்பட்டுநொந்து ஆசைகொள்காமத்தாலே
தொழுதுபண்ணாண்டாரோடு துயரெலாஞ்சொல்லுவாளே ()

அகவல்.

வளமைசேர் கமலாதினைச்சேர்ந்த அழகர்தன்பண்ணையாண்டவாசரணம்ஆண்டவராகும்அடிமைவிண்ணப்பம்மீண்டுநாகேட்டுவினவவேணும் வினயமுஞ்சூதும் விதடமுங்கபடந் தனையறியாதசாதுவென்பள்ளன் பள்ளனைக்கண்டேன் பகையெலாந்தீர்த்தேன், உள்ளமேதெளிந்து ஒருமனதாக, நானவன்முகத்தை நயனத்தாற்பார்க்கத்தானதுகண்டு தளர்ந்துமெய்சோர்ந்தான், என்

முகம்நோக்கி எப்பநீவந்தாய், மன்மதன் ரதியேமதனபொக்கிஷ
மே, கற்புள்ளமாதேகன்னியர்க்கரசே, செப்பதைவென்கிற சிமி
ழ்முலையாளே, பழிமையைநேசங்கள்பற்றுவிடாமல், பிழையுத்பொ
றுத்தாற்பெருமையுமுனக்கே,இளையவளாசை இப்பவேமறந்தே
ன், அழகர்தன்பண்ணையாண்டவரானை, உன்னையல்வாமல் ஒருவ
ர்மேற்சிந்தை, பின்னைவேறில்லைபிறந்தவரானை, இப்படிச்சொல்
லவென்மனதிரங்கி உங்களப்பனைகேட்க அடிமைநான்வந்தேன்
என்மனம்போலேதன்மனதிரங்கிவர்மமில் லாமல்வரவிடவேணு
ம்ஆனைபோலிருந்த அழகுள்ள பள்ளன், பூனைபோலொடுங்கிப்
புலம்புகிறானையா மங்கில்யபிட்சை மடிப்பிச்சைதந்து எங்கள்கு
லத்துக்கிழுக்கு வராமற்கார்த்தசிறையாக்கருணையாற் கார்த்துச்
சேர்த்தியகுட்டை திருப்பவேவேணும் குட்டையைமீட்டுக்கூட்
டியனுப்பக் கட்டளைசெய்யுங்காண் நயினாரே.

பண்ணைகலிப்பா.

கொண்டலெனும் வடிவுகொண்ட கோற்காராவோர் வசன
ங்கூறக்கேளு, பண்டுவந்தமூத்தபள்ளிபள்ளன் மேலாசையினாற்
பாசாங்க லோவிண்டாளநவமழிந்துவேஷமாறி, வியாகுலத்தால்
காமனம்பால் மெலிந்துவாழுங்,கொண்டபள்ளன்பள்ளியுடன் கூ
டிவாழ்கக் குட்டைவிடத்தச்சனுக்கே கூறுவாயே. ௨௨௭

பள்ளன்குட்டையிலெழுந்து பண்ணையோடுசொல்.

தேவரீர்பாதம்போற்றியோர் விண்ணப்பஞ்செய் தேவனதற்
குத்தாரஞ்சொல்லும், நாவலோர்புகழ முக்கூடற்சோம்மைநான்
றுதின்று நன்றாய்ச்சுகித்தேன், பூவலம்புகழ்சந்திராசூரியா பொ
ற்புள்ளமட்டுமிப்பிழை செய்யேன் ஏவலாலடியேன்செய்யுமிப்பி
ழையெலாங் கொண்டுபொறுத்தருடாண்டே. ௨௨௮

பண்ணைசொல்.

பங்கயத்துறைசேர் திருமாதினைப் பாகந்தோய்ந்தமுக் கூட
லழகாதங்கள் கற்பனைப்பண்ணைக்குகந்த தன்வடிவழகக்குடும்பா
நீ உங்கள்சாதிக்கடுத்த முறைமையளவுசெய்யக் களவுசெய்யாம
ற்சங்கையில்லாமற் கொணடிருபோகந் தான்பயிரிட்டு வாழ்ந்தி
ருபள்ளா. ௨௨௯

மூத்தபள்ளிசொல கலிப்பா,

மூத்தபள்ளிசொற்படியே முக்கூடற்பள்ளனைக்கால்
சேரத்தமராமுங்கழற்றிச் செயவரிசைசெய்தவற்பின்

காத்திருந்தபின்னுமந்தக் கண்ணர்பண்ணையாண்டவர்முன்
வாய்த்தவிளைவர்க்கமுடன்மாட்டுவேர்க்கஞ்சொல்வானே ௨௩௰

சிந்து.

சித்திரக்காலிவாலான்சிறை மீட்டான்மணல்வாரிசன்னசம்பாகருங்குருவைசிரகச்சம்பா மூத்துவிளங்கிமலைமுண்டான் பொற்பாளைநெடுமூக்கன் அரிக்கிராவீழுங்கிற்சம்பா. கஸ்தூரிவருணன்கடைக்கழுத்தாணிறங்கள்முண்டான் கல்லுண்டைப்பூம்பாளைபாற்கடுக்கன்வெள்ளைபுத்தன்கருக்குறுவைபுனுகுசம்பாவுமிருபோகத்துக்கும் விளைசேரிற்போட்டேனாண்டே. ௨௩௧

வேறு.

ராஜபாலன்கலியுகராமன்நாரிகோதண்டராமன் கருவாலன்ஆசைமீறிமோணிக்கச்சம்பாநெல் லன்னச்சம்பாவோடாரியாச்சம்பாபூசுங்கற்பூரக்சம்பாநெற்செந்தாழைபூதலம்புகழ்மாதளவண்ணன்வாசவன்றிருக் கூடலிற்பண்ணைக்குவகைக்கோராயிரக்கோட்டையுண்டாண்டே.

சிந்து-ஆதி-கல்யாணி.

குடைக்கொம்பன்செம்மறையன் குத்துக்குளம்பன்மேளக்குடைச்செவியன்குற்றாலன் கூடுகொம்பன் வடர்ப்பின்லைகரும்பொன்மயிலைகழற்சிக்கண்ணன், மட்டைக்கொம்பன் வடர்ப்பில்லைகரும்பொன்மயிலைகழற்சிக்கண்ணன் மட்டைக்கொம்பன்கறுப்பன் மஞ்சள்வாலன்படைப்புப்பிடுங்கிகொட்டைப்பாக்கன்பசுமறையன் பசுக்காலன்அணிற்காலன்படலைக்கொம்பன்விடத்தலைப்பூநிறத்தான்வெள்ளைக்காளையுமிந்தவிதத்திலுண்டாயிரம்பேர்மெய்தாளுண்டே. ௨௩௩

வேறு.

முட்டிக்காலனரக்கன்கருமறை மொண்ணைவாலன் மூகமுறிவில்லான், கட்டக்கொம்பன்கலப்பைமுறித்தான் கல்லைப்பூதன்கருமன்சுவலை; வட்டக்கொம்பன்வளம்பாஸ்மறையன் மணிகட்டிநிற்குமாதளைவண்ணன், மட்டைக்கொம்பனென்றிப்படிச்சொல்லும்பகைக்கோராயிரமாயுண்டென்றாண்டே. ௨௩௩௪

செம்மறையன்மயிலையெருதுசிறக்கு மோழைகருங் கூழைவாலன்நம்மைசேர்சுட்டித்தலையன்முகம் வெள்ளைநடக்கும்பாடக்காலன்கரும் புள்ளி, வெண்மையான் கொம்முறித்தானுடன்

மேகவர்னன்குறியசென்டியன், வண்மையானதருங்கண்ணனோடு வகைக்கோராயிர மாடுண்டெண்ணாண்டே. ௨௩௫

கழற்றில்நின்றிடுங்காளையோராயிரங்காடுநாடெல்லாமோடித்திரியும், உழப்பெருதுகளோர்பதினாயிரம்லுங்குந்தம்பட்ட காளையோராயிரம், கழப்பில்லாமல் வடகரைப்பண்ணையிற்கட்டிமேய்க்கிறதன்றுமூவாயிரம், அளக்கும்பூமியையுண்டஅழகர்க்குஆடுமாடுபள்ளாடுமுண்டாண்டே. ௨௩௬

பச்சைநூற்கயிற்றோர்பதினாயிரம்பகர்ந்த வெள்ளிக்கலப்பையோராயிரம்,மெச்சும்பொன்னினுகம்பதினாயிரம் விளங்குந்தங்கக்கொழுவுமோராயிரம்,வைச்சவெட்டும்வயிரத்தால்மண்வெட்டிவகைக்கோராயிரம்வந்ததுமுண்டு, அச்சுதன்திருக்கூடலிற்பண்ணைக்குஆளவேணபள்ளர்களுமுண்டாண்டே. ௨௩௭

தயாதாமரானதாமரைக் கண்ணழகர்தனுவாங்கிமாமேழுஞ்சாய்ந்தகாலில், கயமரமொன்றில் மணிக்கையொன்றுநுகமொன்றுகழுத்தேர்க்காலொன்று சிறுக்கைக்கோலொன்று, உயர்கத்தியொன்றுவலைமேனியொன்றிந்தவகையொன்றுநன்றாய்மரத்தால்செய்தே, இயல்பாய்த்தவம்பண்ணியிருப்பதுண்டத்தனையும்எண்ணியறியவல்லாரெவர்காணாண்டே. ௨௩௮

இலங்காபாரியின்முன்னாளெங் களழகருடன் எதிர்த்தராவணன்மகனிந்திரசயித்து, கலங்கவேவந்தசிறைக்கருடனைக்கண்டுகட்டுக்கழன்றபாசவடக்கயிறுயிரங்குலங்களுடன்மடிந்த குலவாளரக்கர்வேலும் கூர்வாளுஞ்சேர்த் தடித்தக்கொழுவாயிரம், மலங்காமலிந்த வகையெல்லாந்தேடியேவைத்தேன்வயறிலேநாளேரிடவீராணடே ௨௩௯

கலிப்பா.

ஏரும்பலவிதையுமேர்க்கால்முதலான
சீருமளக்குங்குடும்பன்செய்தியெல்லாஞ்சொன்னதற்பின்
ஆரும்பரவுமழகர்பண்ணையான்கேள்வி
கூருபுகூர்த்தங்குடும்பனுடன்சொன்னானே ௨௪௰

சிந்து-ஆதிதாளம்-நாட்டை.

சத்தமிபுதன்சோதிதைதுலக்கரணந்தவிராதசுபயோகந்தகுபஞ்சாங்கம், மெத்தநன்றெனவேபார்த்து வேதியர்கள் மிக்கது

வாய்முகூர்த்தம்விதித்தாரென்று, பத்தர்தொழுமுக்கூடல்வாணா
ழன்பண்ணைக்கேரிடவேணுமென்றே. உத்தாரமபண்ணைக்காரனு
ரைத்தானுரைத்தவுடன்குடும்பனுழக்கோல்கொண்டுசென்றான்.

சாத்தனபெரியான்கொல்லைத்தாண்டியரியான் அடையனுடை
யான்போத்தையன்சங்கரன், பூத்தனருகக் கான்பூவன்மருதன்வீ
ரன்பூலான்வயிற்றுவேலான்புலியன், காத்தான்வெருக கப்புக்கர்
லன்முருகன்கண்டங்கறுத்தக்கண்டமுண்டன் சங்கணச்சிங்கன்
கூத்தன்முதலாயுள்ளபள்ளரெல்லாங்குரவையிட்டேரைப்பூட்டி
க்கூட்டியுழுதார் ௨௪௨

பூட்டுங்காளையைவிட்டுப் பூட்டாக்காளையைப்பூட்டும்பொ
ழுதிலொருபில்லைக்காளை, மோட்டுவரால்குதிக்கமுகத்தைமாறிமு
டிக்கிமறிக்கியாளையூட்டியோட, மாட்டுக்குறும்படக்கமறிப்பே
னென்றுவடிவழகக்குடும்பன்வந்துமறித்தான், கோட்டுமுனையத
னூற்குத்துமளவிற்குடும்பன்சற்றேமயங்கிக்கொண்டு வீழ்ந்தான்

கலிப்பா.

துள்ளியெழுங்காளைத்தொடர்ந்துபள்ளனைப்பாய்ந்து
தள்ளிவிழுஞ்சோர்வுகண்டுசற்றுந்தெரியாமற்
புள்ளிமிகர்வாகிழித்தபுங்கனூர்முக்கூடற்
பள்ளிவாத்தென்மருதூர்ப்பள்ளியும்வந்தனளே ௨௪௪

மூத்தபள்ளிசொல்-சிந்து-ஆதி-கேதாரகௌளம்.

மதயானையைமுகம்பிடிக்க வல்லாயொருமாட்டுக்குமாட்டா
மற்போனதென்னசொல்வாய்க்கதையோமுன்மலைதனையுமுறித்தா
யந்தப்பலங்கண்டிலேனோடிமறித்தாய்,சதுர்வேதன்விதித்தத்தலை
ப்பொறியோமருதூரிற்சக்களத்திபுதைமருந்தின்வெறியோ, முத
லைச்சித்தால்விளங்குமோவட்டிதான் முக்கூடலழகாபண்ணைக்
குடும்பா. ௨௪௫

இளையபள்ளி-சொல்.

வடுப்பர்டமேனிவடுப்படுமேனன்றுநன்றென வல்லாளன்சமத்
தும்போய்விடுமோ தடுத்துநீயேன்மாடடைத்தொடர்ந்தாய்முக்
கூடல்சதுரிஷபங்குத்திடிவாய்கிடந்தாய அடுத்திடருனக்குவா
முறையோமலைமேலிருக்குமஜயர்பூலாவுடையார்குறையோ, படு
த்தக்கிடையெழுந்துகொள்ளாய்வடிவழகர் பாதமறவாதபண்ணை
பள்ளா,

மூத்தபள்ளிசொல்.

உன்னழகைக்கண்டுமிருந்தேனோநாளுன்னைவிட்டு ஒருவரு டன்வரப்பேசப்பொருந்தேன், வர்ணமூலையாள்மீதில்மன்தோ இ ன்றுவந்துமாடுகுத்திவிழுந்ததென்னிணைவோ, அன்னவர்கள்தன் னென் னெழுத்தின்படியோஅன்றைக்கென்னையறியக்கைப்பிடித் தபொறியோ, பன்னுகந்தனிற்றுயிலுமழகர்வண்ணை தனிற்பலநா ளும்வேலைகொள்ளுங்குடும்பா

கலிப்பா,

ஏங்கிஇருபள்ளியருமிவ்வாறுரைத்துநிற்கத்
தீங்குதலைவர்த்தைசெவியிற்புகுதலுமே
தாங்குதுயர்நீங்கித்தலையசைத்துத்தோள்குலுக்கிப்
பாங்கினெடுமுக்கூடற்பள்ளனெழுந்தானே

சிந்து.

பள்ளனெழுந்துநிலைதரித்தானின்ற பள்ளியர்கண்முகம்பா ர்த்துச்சிரித்தான் - மெள்ளவந்தான்புருவங்காட்டி நெரித்தானே ரா-மீண்டுபூட்டியழத்தரித்தான்உழுதவுழவைக்கண்டுகளித்தான் பள்ளர்-உள்ளபேரையெல்லாம்விளித்தான்-தொழுதுதெய்வத்தி ன்கடன்கழித்தான்அந்ததொழிலின்வினையெல்லாந்தெளிப்தான்- மூளைத்தண்ணீரடைத்திட்டான்கொல்லைமுழுதுமறுநாள்வெட்டி விட்டான், வளைத்துவேலையெல்லாஞ்சூழ்நட்டாறுற்று-வளர்ந்த பின்புவுருப்பட்டான்-வளர்ந்தநாற்றுமுகங்கண்டான்செறிமள்ளர் கூடமது வுண்டான்வுஅளந்திடாதமகிழ்ச்சிகொண்டான்பண்ணை யாண்டவர்க்குச்செய்திவிட்டான் உ௬க

கலிப்பா.

நாறுந்துழாயழகர்நாற்றுப்பழனமெல்லாம்
ஏறுபயிர்தாருநாதனென்றுநட்டவேறுமென்று
தேறும்படியறிக்கைசெய்துபண்ணையாண்டவர்முன்
கூறுகழனித்தலைமேற்கொண்டுபள்ளள்பூண்டானே

சிந்து-அடதாளம்-மோகனம்.

முந்தித்தரிஞசயடித்துமுறித்துமுச்சாலடித்துவிழலுநாலுமுழு துந்திருந்தபின்புமூன்றுசாரந்தடவியேஅந்தத்தளிக்குட்சமைந்தநா ற்றையடுத்தவயலில்பிடுங்கிவேர்அடிக்கிமுடித்துவட்டவட்டங்களா

ங்குவித்துபின் வந்தவழகர்பதத்தைத் துதித்துவைத்த நாற்றை
யெடுத்துநெற்றியில்வைத்து நாலுதிசையும்நோக்கி வாத்திக்கும்
பிட்டுபந்திப்படுத்து கிளையைவகுத்துப்பாளையொலிபோற் குர
வையெழுப்பிப், பயிர்நெருங்காமற்கலந்து போகாமனன்றாய்ப்ப
தியும்பள்ளியரே. ௨௫௧

சின்னிகுறுந்திபருதிமருதிசெல்லிவிராலியெல்லி கலிச்சிதிரு
வியணஞ் சிவமூதிபேச்சிசெம்பிதம்பிச்சாள், நன்னியுடைச்சி ச
டைச்சிமூக்கி நாகியொயிலாள்பூமிபூமைச்சி, நாச்சிபேச்சிகுச்சி
மாட்டிநல்விசெல்லிநாவியும் பொன்னியாசிதூவி சேவிபூவிசாத்
தியும் பூமிகாமிவேம்பிகரும்பி புலிச்சிகலிச்சியங்கணிகன்னிபொ
துவியன்னம்பாலி கன்னியுங்கலந்தொருவர்க் கொருவர் கைவிர
வாய்நடுகைச்சமர்த்துக்காட்டுவருவாரும் பள்ளியரே. ௨௫௨

நாற்றுநடுங்கலிப்பா.

தாற்றுக்கால்பூந்துளவத் தாமழகர்மூக்கூடற்
சேற்றுக்காண்மள்ளருக்குத் தென்றற்காலொன்றாமோ
ஆற்றுக்காலாடியருணாடுங் காற்பண்ணைநடு
நாற்றுக்கால்விட்டுநடுகைக்காலேறாதோ ௨௫௩

சிந்து-அடதாளம்-கல்யாணி.

படைகொண்டுவருங் கருணையின்பெருவிடையின் சேரிக்க
ருணையும்பண்டுமுடித்தகணையினார்க்குக்கண்டு பிடித்ததுணையினா
ர்குடையென்றார்பசுங்கிடையினார் மூக்கூடலழகர்வயலுளேகொ
ண்டாடிக்கொண்டு நடவுசெய்கின்றுண்டோ நல்லபுதுமையைத்
துடையென்றால் வாழைத்தண்டைப்போல் விழிக்கடையென்றா
ர் கயல்கெண்டைப்போல் சொருக்கென்றால் நாகப்படைத்தைப்
போல் மூலைநெருக்கென்றா லகுக்குடத்தைப்போல் இடையென்
றால்வஞ்சிகொடியைப்போல் வருநடையென்றாலிளம் பிடியைப்
போல் இருந்தசாயலுக்கிப்பாற் குருந்திதிருந்திநடவடி பள்ளிய
ரே. ௨௫௪

கடிக்குமாவினடிக்கு மிளைவர்கஞ்சனார்க் கொருநஞ்சனார்ச
டையுமமுதமூடையுந்திரைவிற்காட்டியண்டனாக்கூட்டினார்அடிக்
குளடங்கும் படிக்குமுதல்வரழகர்மூக்கூடல்வயலுளே யாடிப்பா
டிநாற்றுமுடியை யலைத்துக்குலைத்து நடச்செய்தேவடிக்குமது
வைக் குடிக்குமாசுமயக்கமும்பெருந்தியக்கமும்வரம்பிற்பாய்ந்து
வரம்பிற்சாய்ந்தவாட்டமு முருக்கோட்டமும்துடிக்குமிதழைக்க
டிக்குமெய்யது சோர்ந்துவிரிந்தகூந்தலுந் துடையுநெகிழ்ந்தயி
டையுங்கிடந்த கிடையும்பாரும் பள்ளியரே. ( ).

புங்கவர் தமிழ்ச்சங் கத்திறைவர் புலமைத்தலைமையழகனு பொருனையாறுபொருக்குக்காற் புனற்பொருதுமருதூர்வயலினுட் டங்கும்வேலைநாற்றுக்கும்பள்ளக்கால்வயலுக்குஞ்சேற்றுக்குந்தா மதப்படவேமற்றொன்றனைச் சாட்டிமேட்டிக் கூட்டமாய்எங்குங்கார்போற் கூட்டமாயொலிபொங்கவேயதற்கெதிருஞ்சங்கிலிஇசையமூலைகள்குலுங்கவேகாதிலிசையும்பணிகளசையவே அங்குமிங்குஞ்செங்கை நீட்டியருதியுஞ்சின்னமருதியும் அரியாளுங்கட்டைப்பெரியாளும் கொம்மையடிப்பதுபாரும்பள்ளியரே. ()

வெள்ளானைக்கிறைபோற்றுவாரமூரு துள்ளாடிக்கொடியேற்றுவராம்வேதர்பரவும் பாதர்வைகுண்ட வீராழகர்முக்கூடல் உள்ளூர்ப்பள்ளிவெயிலியுந்தெற்குவெள்ளூர்ப்பளளிவெயிலியும் உள்குடிப்பள்ளிச்சடைச்சியுமேற்கட்குடிபபள்ளிச்சடைச்சியுந் துள்ளாடிச் கொண்டுநடச்செய்தே பள்ளர் துள்ளாடிக்கூட்டமிகச் செய்தேசயிலிமகளோயிலி கிட்டச்சாடிப்பெரியானோடிப்போய் கள்ளாலூற்றமீறியே நிலைகொள்ளாமற்றடுமாறியேகாப்பைக்காட்டுமென்றேகைப்பிடிக்குங்கொப்பைப்பாரும்பள்ளியரே. ()

சிறுகண்டுவேழமிருகத்துயரந்தீர்த்து முன்னின்றுகாத்தவர் திருமுக்கூடலழகர்பழையத் திருவிளையாட்டுப்புறவிலே குறுவைபறுதாளடியும்பள்ளன்பிறவியுமூததடியையுங்குழப்பிப்பாம்பு தடவிக்காலிட்டுழப்பிச்சம்பாநடச்செய்தேமருவிமருவிச் சருதங்குடும்பன் மச்சினங்கொளப் பிச்சியைவாவென்றாளவள்போவென்றாள் மறித்தானதற்கவள் பதறிப்போய்த் தறுகியறுங்கொடியிலேயிடைதட்டி விழுந்தமட்டிலே தலையைத்தாங்கிறாப் போலேகுத்துமுலையைத்தாங்கிறான்பள்ளியரே. ௨௫௮

பத்துத்தலையுமாக்கர்புயமுத்தந்தக்கணையொன்றேவியே பருவப்புயலினுருவத்தழகாபண்ணைக் கண்ணாறுநடச்செய்தே மூத்தக்குடும்பன்பெற்றபொத்தாளி மொண்டிச்சோரமாறனார்முக்கித்தமக்கைக்காக்கிகறுப்பிமூளிக்கிளையதூவிதான் குத்துமுலையின் முத்துநகையீற் குதிக்கிறாளந்தச்சிலுக்கிதான் கூசிப்பார்க்கிறாளதற்கவன்பேசிப்பார்க்குமாசையால் எத்ததுணிந்துகிடக்கிறவன் போலேர்க்காலைவிட்டு வாய்க்காலிலே இறங்கிறாப்போலே கிட்டக்கிட்டச்சென்றடுக்கிறான் பாரும்பள்ளியரே. ௨௫௯

செழுந்திருப்பதந்தொழுது வந்தனஞ்சித்தமுருகி நித்தமுந்டி தருவரு முக்கூடலழகர்சித்திரநதிக்கால்வயலிலே உழுந்தெனப்

பாடுப் பழஞ்செதெளிப்புனலுடைத்துமடங்கனடச்செய்தே உண்டி
யையீற்றுய்பண்டி யிற்றுபண்டிப்பானைத் தோணடிக்கல்லை மடி
யேஎழுந்துநெட்டையன்கழுந்துமொட்டையனிவருக்கும்பன்மரு
கன் ஈச்சக்குடும்பன்பாச்சைக்காலிவெட்டிகெட்டிகதட்டித்தான்
கொழுந்திப்பக்கத்தில் விழுந்ததற்கவன்கூடப்பிறந்தமாடன்போ
ய்க் கொண்டையைப்பிடித்திழுக்கிறுனன் பின்சண்டையைப்பா
ரும்பள்ளியரோ. ௨௯௰

துடையைக்கண்டந்த மாணிக்கப்பள்ளன் சுற்றுறுனென்னை
ப்பற்றுறுன்தொழுவானுயிர் விடுவான் வஞ்சிகறுத்தாள் ஆடவே
பூனமநாடவே அவள்கொண்டை குலைந்துசரிந்திட அவள்கொங்
கைகள்ரெண்டும் புரண்டிடசின்னஞ்சிறுத்திடைதுவள சிங்கார
மிட்டபொட்டிலங்கசைகைபிற்பவனங்கட்டினமூக்கோகாலிற்பாட
கமிட்ட கால்நடைக்கோபரிந்தவாதனத்து மின்னலுக்கோபள்ள
ன்பதைக்கிறுண்டிபள்ளியரே. ௨௯௧

ஆடுமேமனம்நாடவேஅவள் கொண்டைகுலைந்துசரிந்திடஅ
வளகொண்டைகள்ரண்டும்புரண்டிட சின்னஞ்சிறுத்திடைதுவ
ள சிங்காரமிட்டபொட்டிலங்க சைகபிற்பவளங்கட்டினமூக்கோ
காலிற்பாடகமிட்டகால்நடைக்கோபரிந்தவாதனத்து மின்னலுக
கோபள்ளன்பதைககிறுனடிபள்ளியரே. ௨௯௨

பஞ்சடிசக்ஞ்சடிகூடச்சேநாட்டச்சேஇடந்தேச்சேகண்ணி
லஞ்சனங்கரிக்கச்சரிக்கச்செங்கறிபொறிக்கச்சே பணியாரம் வா
ரித்தின்னச்சேநண்டுநால் வச்சுக்கிண்டச்சேகத்தைகறிவைத்தவி
க்கச்சே பூமைச்சிவைச்சு உருஞ்சச்சேகள்ளுசாராயங் குடிக்கச்
சேகஞ்சாப்புகையும்வாங்கச்சேசரிக்கநல்லமறைவிலேமுத்தந்தா
ச்சொன்னுனடிபள்ளயரோ ௨௯௩

கலிப்பா.

பாரினமுண்ணப்பசியால்வருங்கருணைப்
பேரின்வரவுபெருகுதற்குச்சாட்சியென்றே
காரினுருவச்சுருதிகாரணர்முக்கூடல்வயல்
சீரினடுநாற்றுநட்டச்செய்யினுநின்றேங்கியதே ௨௯௪

பதிந்தநடவுதேறிப்பசுப்புமேறிப்பருந்து மென்மேற்பரிந்து
சரிந்துமுதிர்ந்ததமிழிசைக்குமுடியசைக்குமுதல்வனைத்தழைந்
துமுதற்குலைழந்து பொதிந்தபொதியநீட்டிப் புட்டிலகாட்டிப்

பொரப்போர்பொன்னிலங்கைபோ லேவணங்கிவிளைந்த கதிர்ய
மூத்துஇடையழுத்துஏற்றம்விளைவுதோற்றந்தோற்றியதே ௨௬௬

### சிந்து-ஆதி-ஆனந்தபைரவி.

முறுகவிளைத்தவாறுமுற்றுந்தெரித்தேன் முக்கூடற்பண்ணை
க்காரன்முன்புகூறும் வறியவன்சொன்னவார்த்தைநன்றுநன்றெ
னமள்ளர்பலரும் நாடிவயலிற்கூடி யுறுதெய்வ மிலைபோற்றியுரி
மைசாற்றிஒங்குநாட்கதிர்கொய்தாருவகைசெய்தார் நெற்கதிரை
யிணைத்தார் நெரிக்கியரிந்தார்நிரப்பிவயல்களெங்கும்பரப்பினாரே.

சடிதியிற்பிரிமுறுக்கிக்கதிர்கட்டிமுறுக்கிக்கட்டினக்கட்டெ
டுப்பார்களத்தில்விடுவார்செடிதிற்சுமைகொண்டுய்ப்பார்நிலைபோ
ருயர்ப்பார்நிலத்தில் விரிப்பார்பிடிவை முறுக்கிப்பிணையல்பிடிப்
பார்பிணையல்விடத்தொடுபபார் போத்துககொடுப்பார்பொடிவை
க்கோலைப் பிடிப்பார்பொலியக்குவிப்பார் பொலிதூற்றியாற்றிப்
பொலிதூற்றிப்பொலிபொலியென்றளப்பார் ௨௬௭

தினச்சத்திரத்துக்கென்றுபெரிய நம்பிதிருமாளிகைக்கிதெ
ன்றுஞ்சிலநெற்கொடுப்பார் தினக்கட்டளையேழுதிருப்பதிக்குந்
தலைக்தார்படிக்குங்குலை சாலியிநெல்லளப்பார் மனத்துக்கினிய
காளை வடமலேந்திரன்மடக்குக்கெனறுஞ்செந்நெல்வாரிகுவிப்
பார், கணக்குஞ்சிறப்பமையக் கூடியளப்பார்கங்காணப்படிபண்
ணைக்காரன்முன்னே ௨௬௮

### கலிப்பா.

வளர்ந்ததிருமுக்கூடன்மாவவனூர்பண்ணையிலே
யளந்தம்பாலிமித்தனையென்றுதாயமுஞ்சிலவுங்
களந்தனிலேநின்றுபண்ணைக்காரனுடனேகுடும்பன்
உளந்தடுமாறுதவகையுள்ளபடிசொன்னானே ௨௬௯

### சிந்து-ரூபகம்-பயிரவி.

அளக்கும்படிகணக்கைப்பண்ணையாண்டேசொல்லக்கேளும்ப
ள்ளர்வளர்க்கும்பெருஞ்சோலியின்மறவாதிருஞ்சொன்னேன் ஆ
டித்திருநாளுக்குநெல்லாயிரங்கோட்டைநெடடைத்தாடிப்பிச்ச
னவகை யாரநுஞ் சம்பாநெல்லளந்தேன்வரும் பங்குனித்திரு
நாள்படிவகைநெல்லாயிரங்கோட்டைதிருவன்பயிரிடும் புளியி
ன செந்தாழைநெல்லளந்தேன்மித்தர்தலைக்கட்டுகட்டச்சிலவாயி

ரங்கோட்டைதன்னைபெற்றான்குடும்பன்புள்ளியிற்பெருவெள்
ளைநெல்லளந்தேன், நாவாணர்க்குமறையோருக்கு நாலாயிரங்
கோட்டைப்ச்சை மூவான்முத்தலிட்டமலை முண்டாநெல்லளந்
தேன் இதுவன்றித்தினப்பூசைக்கு நெல்லாயிரங்கோட்டைச் சி
ன்னபொதுவன் திருத்தளையிற்கண்டபூம்பாளை நெல்லளந்தேன்
முற்றும் கணக்கென்றாற் சொல்லமுடியாதென்பதறிவீர்சேரின்
மற்றநெல்லும்விரையுங்கட்டிவைத்தேன்பண்ணையாண்டே. ()

## ஏசல்-கலிப்பா.

எல்லாக்கணக்குரைத்துவென்பேருமென்கணக்குஞ்
சொல்லாமல்விட்டபள்ளன்சூதையினிகேளுமென்றே
வில்லாளர்முக்கூடன்மிக்கபள்ளிதன்பொருமல்
நில்லாமற்பள்ளியர்முன்னிட்டோரஞ்சொன்னாளே ௨௭௧

## சிந்து-ஆதி-கல்யாணி.

பள்ளனுக்குமருதூர்ப்பள்ளியாசைதானின்னம் பற்றுவிட்ட
இல்லைபாடுபட்டுமறியான் பிள்ளையாரடியில்முறை நெல்லுமளந்
தேயவன்பெற்றநெல்லுடன்கலந்து பெட்டிலிட்டான் உள்ளபே
ரெனக்குத தரகனையெழும் பாமற்காலாலுழுதுவாயாலதட்டியழ
ப்பிப்போட்டான் தள்ளிமண்ணுங்கல்லுநெல்லுஞ்சற்றேகலந்தே
பங்கு தந்தோமென்றெனக்குமட்டுந்தந்தார்பள்ளீரே ௨௭௨

## ஏசல்-சிந்து ஆதி-காம்போதி.

முண்டைமுறையிட்டதென்ன முக்கூடற்பள்ளியடியோமு
ப்புச்சொம்மெனக்குத் தந்தால்முதலியடி மீண்டுமென்னவார்த்
தைசொன்னால்மருதூருபள்ளி வாய்பிச்சம்பேச வேண்டாமடி
கச்சைக்காய்ப்பள்ளிகொண்டைகட்டக்கூ-யென்னைக் கூப்பிடா
தேநீவைது சொன்னப்பேச்சைப்ப-ண்ணையார்க்குச் சொல்லுவே
ணடிசொன்னால்உனக்கென்-யமருதூர்ப்பள்ளிசென்று சொல
லினுங்காசுசெல்லா-சொல்லடிமோடி என்றாலேயாகாதுண்டே
முக்கூடற்பள்-பள்ளன் இங்கேவந்தாலுஞ்சலிகைவில்லாமலெ
ன்ன-தூர்ப்பள்ளிநானுந்தன்றன்னூர்விட்டுனைப்போலொட்டு
-சாய்ப்பில்வந்தேனோவலுசலிகைபேசாதேமுக்கூடறபள்ளியுன்
போல்வழக்கிட்டுக்கட்டிப்பட்டுவந்தேனோ போடிவழக்கிட்டுவே:

தேனே மருதூர்ப்பள்ளிபள்ளன் மாமன்மகனென்றென்னை மறித்
துக்கொண்டான் உழக்கிற்கிழக்குமேற்கோ முக்கூடற்பள்ளிபிரித
துன்னைக்கொண்டானூரில்வந்தான் அங்கேயதன்வந்தாலென்னம
ருதூர்ப்பளளியூரான்மக்களைத்தொடர்ந்துணைபோலோடிவந்தா
னெங்கேயவன்வந்தாலென்ன முக்கூடற்பள்ளிவீட்டிலெய்திற்கா
ட்டினுவிபூனைக்கிணையாய்ப்போமோநாவியென்றாய்ப்பூனையென்று
ய்மருதூர்ப்பள்ளிநாவி, நானேடிபூனை மூளிநாயும்நீயோடி, விவீ
யாட்டமாடவேண்டா முக்கூடற்பள்ளிபேச்சு மிஞ்சிப்பேண்மூக்
கறுப்பாகனுசிப்பேசடி, அஞ்சச்சொன்னதென்னை யென்னமரு
தூர்ப்பள்ளிஉனக். காசைப்பட்டகுடும்பனையஞ்சச்சொல்லடிகொ
ஞ்சக்காரிக்கஞ்சுவேனே முக்கூடற்பள்ளிபின்னங்குட்டையிற்
போடுனக் கவன்கும்பிட்டஞ்சுவான் குட்டைதனிற்பொட்டதற
கோ மருதூர்ப்பள்ளியுந்தன்குடும் பனைப்பிணைப்பட்டுக்கொ
ண்டுமீண்டாய் சட்டைப்பண்ணுதேசிகட்டுகூடற்பள்ளிகுட்டை
ச்- சாறறுவாய்கழற்றுவாயன்றந்திரமோடி. மந்திரமுந்தந்திரமு
மருதூர்ப்பள்ளியுன்போல் வகைவந்தாற்பள்ளனுமென்வசமாகா
னோசந்தியின்மானங்கெட்டாய்முக்கூடற்பள்ளிநீயுஞ்சாரங்கெட்
டமருதென்றோசாதிக்கவாராய் சாதிப்பதுனக்கெவர்மருதூர்ப்ப
ள்ளிநரிதான்பரியாய்ச்சாதித்தானுங்கள்சம்புவல்லோடிபோதிக்க
ச்சாதிக்கவாராய் முக்கூடற்பள்ளி கல்லைப்பெண்ணாகச்சாதித்தா
னுங்கள்பெம்மானல்லோடி மங்கையொருபங்கிருக்க யோகியெ
ன்றேகையின்மழுவேந்தினானுங்கண் மாறனல்லோடி கொங்
கைதன்னில்நாச்சியாளைசங்கையிலாமற்பண்டுகூடி நெய்யிற்கை
யிட்டானுங்கொண்டலல்லோடி காமனைமருகனென்றெண்ணிப்
பாராமற்காய்து கண்ணிற்றீயபார்த்தானுங்கள் கத்தனல்லோடி
மாமனென்னுடாராமற்கஞ்சனைக் கொன்றேகண்ணின்மாருப் பூ
ப்பட்டானுங்கண் மாயனல்லோடி மாதொருத்திக்காசைப்பட்டு
ப்போஞ்சினமாயமான்பின்னோடிப் போனானுங்கள்வள்ளலோடிகா
தலித்துத்தம்பியுடன் சீதைபோட்டாலன்று கடலேறிப்போ
னானுங்கள்கண்ணனல்லோடி தான்பசுபாலகின்றகன்றைத்தேர்
க்காலிற்சோழன் றன்மகனைக் கொன்றானுங்களானுவல்லோடி
வான்பணிக்குள்தவசிபோல்மறைந்தேநின்று வாலிதனைக்கொன்
றானுங்கண்மாயனல்லோடி நாட்டுக்குள்ளிருந்து பசிக்காற்றப
ட்டாமல் வாரிகஞ்சையெல்லா முண்டானுங்கணுதனல்லோடி,

மாட்டுப்பிறகெரிந்து சோற்றுக்கில்லாமல்பெருமண்ணையுண்டானுங்கண்முகில்வண்ணனல்லோடி, கற்றைச்சடைகட்டிமாவுரிச்சேலைதான்பண்டு கட்டினவனுங்கள்சங்கக்கத்தானல்லோடி ஏறும்பெருவாகனங்க ளில்லாமையினால்மாட்டில்-ஏறியேதிரிந்தானுங்களீசனல்லோடி, வீறுசொன்ன தென்னமாடுதானுமில்லாமற்பட்சிமீதிலேறிக்கொண்டானுங்கணுதனல்லோடி அறியுஞ்சிவனுமொன்றறியாமற்றேவன்மாரா யகத்தில்நீங்கள் நிந்திக்கலாமோசொல்லென்றான், மரியாதையில்லாமல்முன்வைத்தார்சொல்லென்றுபள்ளன் வழிமறுத்துமூத்தாளை வண்டுறுக்கிறான் வண்டுறுக்கவோவுனக்குநான்பெண்டிருந்தேன் சிறுபோதுவங்கொட்டிச்சிறிக்கியரசைவைத்ததாசொல்லுகிறாய், துண்டரீகவார்த்தைமூத்தாளை சொல்லநியாயமுண்டோதுட்டத்தைப்பேசின வாயிலெட்டியுதைப்பேன்உதைத்துவைதாவிளையாளொன்றுஞ்சொல்லமாட்டாளென்றுஓரஞ்சொல்லவந்ததிப்போபோதும்போபள்ளா, தூரத்திச்சினந்துபள்ளனுமுழக்கோலினாலடிக்கச்சோபங் கொண்டிளையபள்ளிமோதிவிழுந்ததுகண்டுகுடும்பன்மெத்தவிசாரத்துடனேவெட்க நின்றுபின்னிளையாள் பக்கலிற்சென்றான் தாழ்ந்துளைத்திளையாள்தலைதாங்கியெடுத்த கொடுங்கைதன்னில்வைத்துமுகவேர்வை தன்னை துடைத்தான் ஆளுந்தேவமாரா நீங்கள் அகத்தில் நிந்தித்தாலேநான் அடித்ததனாலுனக்கு ஆயாசம்வேண்டாம் வாழுமூத்தவன் தன்னிடமனது சந்தோஷமாக, கிழ்ந்தவள்பாதமிரண்டும் வணங்கிவாபோடி, போடியென்றவாக்கின்படிநானடந்துவணங்கினாற்பொல்லாள் வசனஞ்சொல்லாளென்னால்தீராது, வாடிமுக்கூடற்பள்ளிமருதூராள்மனங்குளிர வாவென்றறைந்துநல்ல வாக்குரைபோடிநல்லவாக்கிளையாளுக்கு நானேசொல்வதுகுடும்பா, நாட்டார்க்கேற்குமோஇதுஞாயமோபள்ளா எல்லோருமகிழ்ந்திடவேநில்லாதேமூத்தாளேதெய்வ, மென்றுநினைந்தவள்பாதந்தெண்டஞ்செய்போடி தெண்டஞ்செய்ததுநீயெழுந்திரு நான்சொல்லுகிறேன் சினத்தாலறுத்தமூக்குச்சிரித்தலொட்டுமோ ஒட்டவந்தேனென்றுசொல்லிசசட்டைபண்ணுதேசுகிறாய், உன்னைப்பார்க்களந்தனுக்குக்கோபமுண்டோடி பெருமாளடியானுக்குப்பெண்டுமிருந்துமெங்கட், பெருமானைநீயேபழித்துப்பேசலாமோடிதிருமாலருமையென்றாற் சாலப்பசித்தால்யாருந்தின்னாததுண்டோவெறுத்தாற்சொல்லாததுண்டோ தீராண்மை நன்றாகச்சொன்னாய் மருதூர்பள்ளிபோபோபோ சினத்தாலுஞ்சீராழியச்செப்புவார்களோவாராதோவெனக்குக்கோபமுக்கூ

டற்பள்ளிமூர்த்தி, வைதவளாவாழ்த்தியபேர்வையகத்துண்டோமு ந்திவைதால்வைவனென்றாய்மருதூர்ப்பள்ளிசற்றே மூப்பிள்ளை பார்த்துத்தலைச்சாய்ப்பாரில்லையோ இந்தவார்த்தைமூத்திசொன் ல் முக்கூடற்பள்ளிசண்டை, பித்தனையுண்டோவெனக்குப்புத்தி யில்லையோ சொன்னாலென்னநீயும்பொறுப்பேன் கிளைசூழ்ந்திரு க்கநாமேகூடிவாழ்ந்திருக்கலாம் அழகரீசருமொன்று அறியாமல் நீயும்நானும் அகந்தைகள்பேசவேண்டாஞ் செகங்காணவெவ்வள மையாயிருவோருமருவிப்பள்ளனுடனே மகிழ்ந்து சுகித்திருப் போம்மருதூருப்பள்ளி முக்கூடலமூத்தபள்ளிமுறைமையாய் நீ யுநானுமுசியாமற்கொண்டபள்ளனுடனேவர்ழ்வோம் மைக்கார் நிறமுடையமாலழகர்பதம்போற்றி மங்களம்பாடித்தினம்பொங் கமாய்வாழ்வோமே. ௨௱௫

## வாழி.

அண்டமும்வாழிவாழி யமரரும்வாழிவாழி
கொண்டலும்வாழிவாழி குமரரும்வாழிவாழி
தண்டமிழ்வாழிவாழி தரணியிலுள்ளோர்வாழி
எண்டிசைமுழுதும்வாழி யென்குருநாதன்வாழி.

# முக்கூடற்பள்ளுநாடகம்.

முற்றுப்பெற்றது.

---